59135

# [illegible]

By

T.R. Rangaswami Iyengar, M.A.

V/211

1927

523

# தமிழ்நாடு

BY

T. R. RANGASWAMI AYYANGAR M.A., L.T.,
Headmaster, Banadurai High School,
KUMBAKONAM.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
27 JUL 1927

THE
B. N. PUBLISHING HOUSE,
KUMBAKONAM.

[PR]INTED AT
THE [VIS]HAVACHANI PRESS"
[KUM]BAKONAM.
[1]927

[Price Annas 8]

V2\1
N27

59435

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள் **1992**

செப்பனிட்டு முடித்த நாள்
**ஜூன் 1992**

சரிபார்க்கும்
மு. பா. எ.
கையொப்பம்.

ஆராய்ச்சி
உதவியாளர்
கையொப்பம்.


# தமிழ்நாடு

BY


**T. R. RANGASWAMI AYYANGAR M. A., L. T.,**
Headmaster, Banadurai High School,
KUMBAKONAM.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
27 JUL 1927
MADRAS



THE
B. N. PUBLISHING HOUSE,
KUMBAKONAM.

PRINTED AT
THE "YATHARTHAVACHANI PRESS"
KUMBAKONAM.
1927


[All rights reserved.] [Price Annas 8.

# PREFACE.

The fundamental principles of true education require that a child at the beginning of his career should learn more about his own surroundings and his ancestors than about foreigners and their lands. It is an irony of fate that a Tamil pupil, almost to the end of his school life, knows more about Asoka, Tamerlane and Akbar than about Karikala, Raja Raja or Vikrama Pandya. The knowledge of one's own country, its peoples, manners and religion is always of greater importance to a student than that of other peoples', however useful this may turn out to be in after life. This desideratum of true education is being tardily recognized in our schools and by our authorities. For a long time the history of South India was a sealed book and glimpses of light could be had only here and there. Now that a connected history of the Tamil land (thanks to the labours of archeologists and scholars) is available, there can be no more

59435

excuse in insisting upon the old routine of drawing syllabuses and forcing tender children to swallow pills of foreign matter with the still more bitter coating of a foreign language. The fault is not more with the educational authorities than with us, schoolmasters. There are still teachers who believe that History be better taught through the medium of the English language in our High Schools than its being presented in a more natural way through the pupils' mother tongue. The aim of a true educationist should be to remove this wrong notion and if this booklet can contribute to that end, however little, the object of its writer will have been more than fulfilled.

THE author of this booklet is highly indebted to Mr. T. V. Sadasiva Pandarathar, the Senior Tamil Pandit of the Banadurai High School, Kumbakonam for his valuable suggestions and contributions and to Mr. C. N. Duraiswami Ayyar, the Junior Tamil Pandit of the same school for seeing the book through the press.

15th May 1927. THE AUTHOR.

4

# INTRODUCTION

BY

Professor K. SUNDARARAMA AYYAR Avl., M.A.


FROM the most ancient times, every Indian author or authority, sacred and secular, has indulged in the proud consciousness that this motherland of ours is worthy of all the devotion its people can give to it and that to be born within its borders and to live the life enjoined for them by the eternal oracles to which they have always borne allegiance are privileges higher than any allotted to any other race or people on earth. The Tamil people have, especially, been sharers in these views and sentiments, and have in their literature and arts preserved a continuous record of loyalty and patriotism towards their Tamilagam of which they have every reason to be proud. In the present system of education, however, these circumstances of our past history and these special characteristics of our people have not been recognised, and much evil has been done

in consequence. Times and views have now changed, and all discerning men recognise that no educational system in South India can be accepted which does not include in its curriculum an adequate knowledge of the history of its past, both political and cultural—knowledge, too, which must be adapted in its range and quality to the various stages of ascent through which our youths have to pass from the earliest stage of their training to the last. I feel sure that this Tamil work by Mr. T. R. Rangaswami Ayyangar is well adapted to meet the exigencies and needs of the curriculum of our High School classes and will be of great use in equipping the minds of our South Indian youths with such a knowledge of their native land as will be a valuable possession and inspiration to them not only in this early stage of their mental development, but also a foundation for their subsequent progress in education, their behaviour as members of society, and the adequate performance of their duties as citizens in the future that awaits them in the worthy home of their race and nation.



# CONTENTS.


| | | |
|---|---|---|
| I. | தமிழகம் .... .... | 1 |
| II. | தமிழரியல்பு .... .... | 6 |
| III. | ஆட்சிமுறை .... .... | 12 |
| IV. | ஐம்பெருங்காவியங்கள் .... | 20 |
| V. | சங்கப்புலவர்கள் .... .... | 32 |
| VI. | பிற்காலத்தமிழ்ப்புலவர்கள் .... | 39 |
| VII. | சிவனடியார்கள் .... .... | 48 |
| VIII. | ஆழ்வார்கள் .... .... | 57 |
| IX. | மதஸ்தாபகர்கள் .... .... | 63 |
| X. | காவிரிப்பூம்பட்டினம் .... | 67 |
| XI. | பழையதமிழரசர்கள் .... | 71 |
| XII. | பல்லவர்கள் .... .... | 74 |
| XIII. | சோழர்கள் .... .... | 77 |
| XIV. | பாண்டியர்கள் .... .... | 81 |
| XV. | தமிழரின்தற்காலநிலை .... | 86 |




# அதிகாரம் I.

## தமிழகம்.

திருமாலின் தேவியாகிய பூமாதின் முகத்துக்கோர் திலகமென விளங்கும் இப்பரதகண்டம் உலகின்கணுள்ள ஸப்த தீபங்களில் ஒன்றாகிய ஜம்புத்தீவி லிருக்கிறது என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. ஆதியில் மனுகுல மன்னனாகிய ரிஷபதேவன் மகன் பரதனென்பான் ஆண்டுவந்த தேசமாதலின் இப்பூபாகம் பரதகண்டமெனப் பெயர் பெற்றது. இப்பெயர் ஹிமாசலம் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள அகன்ற பூமிக்குரித்தாகும். மத்தியிற்கிடக்கும் விந்தியகிரித்தொடரால் இக்கண்டம் இருபாகமாய்ப் பிரிபட அத்தொடரின் வடபாலுள்ள நாடு ஆரியாவர்த்தமென்ற பெயரையும், தென்பாலுள்ள பூமி திராவிடதேசமென்ற பெயரையும் பெற்றனவாகும். இத்தென்னாட்டில் வடவேங்கட முதல் தென்குமரி வரைக்கும் பரவிய நாட்டைத் தமிழகமென்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

தமிழர் இந்நாட்டுப் பூர்வகுடிகளா, அல்லது எத்தேசத்தவர், எங்கிருந்து இந்நாட்டிற்பிரவேசித்தனர், என்ற வினாக்கட்கு, கொள்கைவேறுபாடி-

ருப்பதால் தக்க விடை கூறுவது இயலாது. இக்கண்டத்திற்கப்பால் வடமேற்கு நாட்டில் வழங்கும் பிராகியென்ற பாஷைக்கும் தமிழுக்குமுள்ள ஒற்றுமையைக் கொண்டு சிலர் தமிழரை அங்கிருந்து வந்தவரென மதிக்கிறார்கள், வேறு சிலர் விந்தியகிரியைச்சார்ந்த மத்திய தேசத்தில் வழங்கும் சில பாஷைகட்கும் தமிழுக்குஞ் சம்பந்தமிருப்பதாகக் கொண்டு தமிழர் வடகிழக்கு நாடுகளிலிருந்து வந்தனரென அபிப்பிராயப்படுகின்றனர். இந்நாட்டுப் பூர்வகுடிகளே யிவரென்பாருமுளர். ஒரு காலத்தில் குமரிக்குத் தெற்கில் 49 நாடுகளிருந்தனவென்பதும் அவை கடலால் கொள்ளப்பட்டனவென்பதும் பழைய நூல்களினின்றும் வெளியாகின்றன. இந்நாட்டின் கீழ்பாலுள்ள கடல் முழுதும் ஒரு காலத்தில் தரைப் பிரதேசமாயிருந்த தென்பதும், மானிடர்க்கு உற்பத்தித்தானம் இதுதானென்பதும், பூமி சாஸ்திர ஆராய்ச்சிக்காரரது கொள்கை. பிரளய காலத்தில் வைவசுவதமநு மத்திய தேசத்திலிருந்தே படகிலேறி இமயகிரிபோய்ச் சேர்ந்தாரென்று மஹாபாரதத்திற் கூறப்பட்டுள்ளது. இம்மூன்றும் இந்தக் கொள்கைக் காதாரமாகும்.

கொள்கை யெப்படியிருப்பினும், இந்நாட்டவர் ஒரு காலத்தில் வடதேச ஆரியர்களினும் நாகரிகத்திற் சிறந்திருந்தனரென்பது பலரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. மேற்கேயுள்ள மலைத்தொடர்களில் உற்பத்தியாகிக் கீழ்த்திசைநோக்கி யோடிவரும் வடபெண்ணை



முதல் தெற்கில் செம்பில் வரைக்குமுள்ள பல நதிகளால் செழிப்பிக்கப்பெற்ற இத்தேசத்தின்கண் வசித்த மாந்தர்கள் செல்வத்திலுங் கல்வியிலுமுயர்ந்தவர்களாகவே இருந்திருத்தல் வேண்டும். இந்நாட்டாரின் நாகரிகம் எகிப்து, கிரீஸ் முதலிய தேசங்கள் வரைக்கும் பரவியிருந்ததாகத் தெரியவருவது இதற்குத்தக்க சான்றாகும்.

ஒரு சாரார் மதப்படி இந்நாட்டில் உருவத்திலும் நடையுடை பாவனைகளிலும் வேறுபாடுள்ள தமிழரல்லாத மக்கள் பூர்வத்திலிருந்தார்களென நினைக்கவுமிடமுண்டு. ஆடையாபரணம் யாதுமின்றி மலைக்குகைகளில் வசித்து வனங்களிற்றிரிந்து கற்கருவிகளால் காட்டுமிருகங்களை வேட்டையாடித் தின்றவர் இப்பூர்வகுடிகளே. மற்றொரு சார்பினர் கொள்கைப்படி இவர்களையே ஆதித்தமிழ்மக்கள் என்னலாம். தற்காலத்தில் மலைநாடுகளில் வசிக்கும் ஒட்டர், தொதுவர் முதலியோர் இவர்களுடைய இனத்தினரே. இந்நாட்டில் ஒரு காலத்தில் ஆண்டுகொண்டிருந்த நாகர் என்றவகுப்பினரைத் தமிழ்மக்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவராக மதித்தார்களென நினைக்கப் பழைய கதைகளில் ஆதாரமிருக்கிறது.

இச்சிறந்த தமிழகத்தையாண்ட மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் என மூன்று வம்சத்தினர். மேற்றிசை மலைநாட்டரசன் சேரன். பனம்பூமாலையணிந்து விற்கொடிதூக்கி வாளுங்கையுமாய்ச் சமரிற்

செல்லும் வீரன் இக்குலத்தினனே. ஆத்திமாலை சூடிப் புலிக்கொடியேந்திப் புகழ்பெறப் போரிற் பொரும் வேந்தன் சோழன். புனனாடு அனைத்தையும் தன்றனிக்குடைக்கீழாக்கி, ஆற்றலோடு அரசு செலுத்தும் கோமகனுமிவனே. வேப்பின்மாலை மார்பிற் புரள, வீரகண்டாமணியணிந்து பகைஞரை வெல்லும் பார்த்திபன், மீனக்கொடியோன் பாண்டியன். இவர்களின் நாட்டெல்லை பின்வருமாறு கூறப்பட்டுளது.

1. "வடக்குத் தலம்பழனி வான்கிழக்குச் செங்கோடு
குடதிசைக்குக் கோழிக்கோ டாகும்—கடற்கரையி
னோரமது தெற்காகு மோரெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு"

2. "கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்"

3. "வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாந்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்டகடல்கிழக் கைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லை பதி"

இவ்வரசர்குலத்தின் ஆட்சி தொடங்கிய காலம் உரைக்க இயலாதது. பூர்வகாலத்து நூல்களில் இவர்களைக் குறிக்கும் பாடல்கள் பலவுள. வடநாட்டாரியரின் முதற்காவியமாகிய வான்மீகிராமாயணத்தில் இவ்வரசர்களின் பெருமை கூறப்பட்டுள்ளது.



இதை யாதாரமாகக்கொண்டு தமிழ்ப், புலவர் நாயகமாகிய கம்பர் எழுதுகிறார் :—

"துறக்கமுற்றார் மனமென்னத் துறைகெழுநீர்ச்சோணாடு
கடந்தாற் றொல்லை, மறக்கமுற்றா னதனயலே மறைந்துறைவ
ரவ்வழிநீர் வல்லை யேகி, உறக்கமுற்றார் கனவுற்றா ரெனு
முணர்வி னொடுமொழுங்கி மணியா லோங்கற், பிறக்கமுற்ற
மலைநாடு நாடியகன் றமிழ்நாட்டிற் பெயர்திர் மாதோ"

வில்லிபுத்தூராழ்வார் தாம் பாடிய பாரதத்தில் இவர்களைப்பற்றி யின்னம் விரிவாய்க் கூறியுள்ளார். பாண்டவகுலதிலகனான அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்துவருங்கால் மதுரைமாநகரேகி அவ்வூரரசன் சித்திரவாகனன் மகள் சித்திராங்கதையை மணந்து பப்புருவாகனென்ற புதல்வனைப் பெற்றானெனப் பாரதகதையிலிருக்கிறது.

இதுநிற்க, 3000 ஆண்டுகட்கு முன்னர் எகிப்து தேசமன்னன் சாலோமன், தமிழ் நாட்டிலிருந்து குரங்கு, மயில் முதலியவற்றைப் பெற்றானெனத் தெரிகிறது. தென்னாடன் ரோமாபுரிமன்னன்பால் தானாபதிகளையனுப்பி அநேக உடன்படிக்கைசெய்து வியாபாரம் நடத்திவந்ததாகக் கூறப்படுவது இந்நாட்டிலகப்படும் ரோமநாட்டுப்பொற்காசுகளால் உண்மையென வெளியாகின்றது. ஈழதேச சரித்திரமாகிய மகாவம்சமென்ற நூலில் தமிழ்நாட்டுமன்னரைப்பற்றிப் பல முறை கூறப்பட்டிருக்கிறது.

# அதிகாரம் II.

## தமிழரியல்பு.

தமிழகத்தின் நிலவமைப்பை முற்றுமுணர்ந்த பண்டையாசிரியர், அந்நாட்டை ஐந்திணையாகப் பகுத்தனர். இப்பாகுபாடு தொல்காப்பியத்தால் நன்கு விளங்கும். திணையென்றசொல் ஒழுக்கமெனப் பொருள்படும். நிலத்துக்கொத்தே ஒழுக்கமமையுமென்பது துணிபு. இவ்வொழுக்கம் ஐந்து பிரிவுடைத்தாதலால் நிலமும் ஐந்து திணையென வகுக்கப்பெற்றது. அந்நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற பகுப்புடையது. அப்பகுதிகளைப் பின்வரும் சூத்திரத்திற் காண்க:—

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

இச்சூத்திரத்திற் பாலையைக் குறித்தாரில்லை.



அதற்குக் காரணம்,

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து,
நல்லியல் பழிந்து நடுங்கு துயருறுக்கும்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" என்பதாம்.

பாலைக்குத் தெய்வங்கள் பகவதியுஞ் சூரியனும்.

1. முல்லைநிலமக்கட்கு—உணவு-வரகு, சாமை; விலங்கு—முயல், சிறுமான்; செய்தி—வரகுகளைபறித்தல், நிரைமேய்த்தல், குழலூதுதல்; பூ—முல்லையும் தோன்றியும்; ஆடவர்-இடையர்; மகளிர்-இடைச்சியர்.

2. குறிஞ்சிக்கு—உணவு—மலைநெல், தினை; விலங்கு-புலி, கரடி, சிங்கம், பன்றி, யானை; செய்தி-தேனழித்தல், கிழங்கெடுத்தல், குன்றமாடுதல், கிளிகடிதல்; பூ—குறிஞ்சி, காந்தள், வேங்கை, சுனைக்குவளை; ஆடவர்—குறவர்; மகளிர்—குறத்தியர்.

3. மருதத்துக்கு—உணவு—நெல்; விலங்கு—எருமை, நீர்நாய்; செய்தி—நெல்லரிதல், வைக்கோல் துவைப்பித்தல், களைபறித்தல்; பூ—தாமரை, செங்கழுநீர், குவளை; ஆடவர்—கடையர், உழவர்; மகளிர்—கடைசியர், உழத்தியர்.

4. நெய்தற்கு—உணவு—மீன்விலையும், உப்பு விலையும்; விலங்கு—சுறு, முதலை; செய்தி—மீன் விற்றல், உப்பு விற்றல், அவற்றையிட்டல்; பூ-தாழை, நெய்தல்; ஆடவர்—பரதவர்; மகளிர்—பரத்தியர்.

5. பாலைக்கு—உணவு-வழிபறித்தனவும், ஊர்க்கொள்ளையடித்தனவும்; விலங்கு—வலியழிந்தயானை, புலி, செந்நாய்; செய்தி—நிரைகொள்ளல், சுரத்தெறிதல், சூறையாடல்; பூ—மரா, குரா, பாதிரி; ஆடவர்—மறவர்; மகளிர்—மறத்தியர்.

மேலும், தமிழரில் "சூரிய சந்திராதிகளை வணங்கினோரும் பலர். ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருளாகிய கந்தழியையும் வணங்கி வந்தனர். துர்க்கை, கொற்றவை என வழங்கிய தெய்வங்களையும் போர் முகத்தில் வீரர் வணங்கியும், அவற்றிற்கு நரபலியும் வேறு பலிகளும் கொடுத்தும் வந்தனர்."

ஆயினும் பொதுவில் தமிழ் மக்களின் தொழில் பயிரிடலும் நெசவுமே. ஆறுகளிற் செல்லும் நீரைக் குளம் கால்வாய்களில் விட்டு வயல்களிற் பாய்ச்சித் தானியங்களைப் பயிரிடுவர். நெல், மூங்கில், வாழை, சிறுகடுகு, இஞ்சி, மஞ்சள், தினை, வரகு, சோளம், பருத்தி, கரும்பு முதலியன அவர்களால் ஏராளமாய்ப் பயிரிடப்பட்டன. முத்து, சங்கு, உப்பு, மீன் முதலியவற்றைச் சேகரிப்பது கடற்கரை மாந்தர் தொழில். பருத்தி நூல் நூற்பது பெண்மக்கள் தொழில்.

ஆசிரியர் தொல்காப்பியனார் ஆரியமணமுறை எட்டையுங் கூறியுள்ளார். இவற்றுள் ஆதித் தமிழ் மக்கட்குக் காந்தர்வமே சிறந்தது. இருவர் மனமொத்த களவுமணமே யிது. பிற்காலத்தில் களவு



மணத்தில் தலைவியின் உடன்பாடின்றி அவளை வலிந்து கொள்வது நிகழ்ந்ததுபற்றிச் சடங்கோடு மணத்தல் கைக்கொள்ளப்பட்டது. இதனை, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரண மென்ப" என்ற கற்பியற்சூத்திரத்தால் அறிக. ஆசுரம் அரசர்க்கேற்றமுறை. இவ்விதிப்படி வதுவைக்கொள்ளல் பிற்காலவழக்காயிற்று.

உள்நாட்டு வியாபாரம் மிகுதியாய் நடந்தேறியது. மேருமலைப்பொன், குடகுமலை மிளகு, பொதியின்மலைச் சந்தனம், கீழ்கடல் முத்து, சங்கு, கங்கைக்கரையிலுள்ள பிறவிளைவுகள் முதலியன முக்கியமான உள்நாட்டு வர்த்தகச் சரக்குகள். வெளிநாட்டு வர்த்தகத்திற்கு எல்லையில்லை. குடநாட்டார் மிளகைக் கப்பலிலேற்றிப் பிறவிடங்கட்குக் கொண்டுபோயினர். அராபியா முதலிய நாடுகளிலிருந்து குதிரைகள் வந்தன. ஈழம், கடாரம் முதலிய நாடுகளிலிருந்து நுகரும் பண்டங்கள் வந்தன. கற்பூரம், பனிநீர், குங்குமம் சீனாவிலிருந்துவந்த சரக்குகள். மேல்நாடுகளிலிருந்து மதுவகைகள் வந்துகொண்டேயிருந்தன. காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, முசிறி, கொற்கை முற்காலத் துறைமுகப்பட்டினங்கள்.

தமிழர் போர்முறை ஆரியர் வழக்கத்தையொத்ததே. கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், தார், முடியுடன் அரசர் போருக்குச்செல்வர். அச்சமயம் சமர்முறை தெரிவிக்கத்தக்க வெவ்வேறு பூக்கள் சூடிப் பொருவார்கள். வெட்சி, வஞ்சி, உழிஞை,

தும்பை, வாகை, காஞ்சி, நொச்சி முதலியவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திணையைக் குறிக்கும். அந்நிய நாட்டைக் கவரும் வேந்தன், முதலில் அந்நாட்டு நிரையைக் கவர்வான். பிறகு நிமித்தம்பார்த்து நன்னாள் குறித்துத் தன் குடை, வாள் முதலியவற்றை யனுப்பி எள்ளுருண்டை, தினைமா, பொரி, அவரை, துவரை, நிணம், குடர், உதிரம் முதலியவற்றைப் போர்க்களத்திற் காளிக்குப் பலியிட அனுப்பியபின் தன் சேனையோடு புறப்படுவான். எதிரியைச் சமரில் வென்றால், இறந்த வீரர்களின் சவங்களைக் குவித்து உதிரத்தைத் தாழியிற் கொதிக்கவைத்துத் துர்க்கைபூஜை செய்து, கள்ளுண்டு போர்க்களத்திலேயே அரசனும் சேனைத் தலைவரும் கூடிக் களிக்கூத்தாடுவார்கள். எதிரியின் கோட்டையைப் பிடித்தபின்னர், அதை அடியோடு இடித்துத்தள்ளிக் கழுதைகளைக்கொண்டு அந்நிலத்தையுழச்செய்து, உண்ணுவரகும், வேலும், கொட்டையும் விதைப்பார்கள். தோற்ற அரசனின் காவல் மரத்தை விறகாய்ப் பிளந்து எரிப்பார்கள். அவனது பட்டத்து யானையின் முகப்பொற்படாத்தை யழித்துச் சிறு தாமரைப்பூக்கள் செய்து அவற்றைப் பாணர்க்கீவர். பகையரசர் மகுடத்தைப் பொடியாக்கி அதைக் காலிற்கு வீரத்தண்டையாகச் செய்து அணிவார். ராஜத்துரோகியைக் கீழே தள்ளி யானையைவிட்டு மிதிக்கச் செய்வதும், அவனை யோர் ஆஸனத்திருத்தி நாற்புறமும் கைத்தீவட்டிகளால் குத்திக் கொல்லும் இந்திர பதவியென்ற கொடிய வதைக்காளாக்குவதும் வழக்கமாயிருந்தன.



ஆயினும், தமிழ்மக்கள் தர்ம யுத்தமே செய்வர். போரில் முதுகிடுவோனையும், ஆயுதமற்றவனையும், சரணடைந்தவனையும், மக்கட்பேறில்லானையும், பெண்மக்கள் பெயருள்ளவனையும், விரித்த மயிருடனோடுபவனையும் வலியக்கொல்லார். ஓர் கோட்டையைத் தாக்கு முன்னர் அந்தணர், பசு, பெண்டிர், குழவிகள் முதலியோரை யப்புறப்படுத்தியே பொருவர். போரிலிறந்த வீரனது புகழுக்காக ஓர் கற்றாணட்டி அதில் அவன் பெயரையும் வீரச்செயலையும் வெட்டுவித்து, அக்கல்லிற்கு மஞ்சனமாட்டி வாஸனைபூசி அதைத் தெய்வமெனத் தொழுவர். போரிற்கொண்ட பொருளைத் தேவாலயங்களிலும் வேறு தர்மங்களிலுஞ் செலவிடுவர்.

தமிழ்மக்களின் தெய்வப் பெயர்களையும் மணமுறையையும் போர் வழக்கையும் நோக்குங்கால் இவர்க்குத் தொல்காப்பியர்காலத்துக்கு முன்னரே வடநாட்டாரியரின் ஸம்பந்த மேற்பட்டிருக்க வேண்டுமென்பது திண்ணம்.

## அதிகாரம் III.

# ஆட்சிமுறை.

அக்காலத்துப் பண்டைத்தமிழ்மன்னர்கள் கொடுங்கோல் வேந்தராய் மனம்போனபடி ஆட்சிபுரிந்தனர் எனக் கொள்வது பிசகேயாகும். அரசனுடைய ஆலோசனைச் சங்கத்தார் ஐம்பெருங் குழுவினர் ஆவர்.

1. புரோகிதர்—தருமநெறி தவறாமல் அரசருக்கு அறிவு புகட்டி வைதிக கர்மங்களைச் செய்வித்துக் கொண்டு அவர்களது குலகுருவாக இருந்தனர்.

2. அமைச்சர்—பொய்யுரையாத நாவினர்; அரசனுக்குத் தக்க சமயங்களில் ஆலோசனைகூறி அரசியற்கருமங்களை ஒழுங்குபெற நடத்திவந்தவர்கள்.

3. சேனாபதிகள்—அரசனது நால்வகைப் படைகட்கும் தலைமைவகித்துப் போர்நிகழுங்கால் அவற்றை நடத்துபவர்கள்.

4. தூதர்—அந்நியநாட்டரசர்பால் சென்று தம் அரசர் செய்திகளைத் தெரிவித்து மீள்பவர்கள்.

5. ஒற்றர்—சாரணர்; பிறநாடுகளில் மறைந்துறைந்து அங்கு நடக்கும் விஷயங்களைக் கண்டுணர்ந்து தம் அரசர்பால் உரைக்கும் அறிவாளர்.



இனி, சிலப்பதிகார உரையாசிரியர் இவ்வைம்பெருங்குழுவைச் சிறிது வேறுபடக் கூறுவர்.

அவர் கூறும் குழுக்கள் :—மாசனம், பார்ப்பார், மருத்துவர், நிமித்தர், அமைச்சர் என்பவை. இவ்வைந்தும் ஐந்து சபைகளை ஈண்டுக் குறிக்கின்றன.

இவற்றைத்தவிர நடுநிலைகோடாது நீதிபரிபாலனம் புரியும் அறங்கூறவையங்களும் நாட்டில் ஆங்காங்கு உண்டு.

"இரவுபகலாய் நகரைக் காவல் செய்யும் நகர்க்காவலர் பல பெயர் இருந்தனர்; இவர் புலிபோலுநர்; துயில்கொள்ளாக்கண்ணர்; அஞ்சாநெஞ்சர்; களவுத்தொழில் தந்திரங்களைக்கண்டறியும் நுண்ணிய அறிவினர்; குறிதப்பா அம்பினர்; தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்தோடும் காரிருள் கவிந்த யாமங்களினும் இவர் இளைப்பின்றி ஊர் சுற்றி வருவார். கறுத்த உடலினராய்க் கருஞ்சேலையுடுத்து வாள்கைக்கொண்டு மென்னூலேணி அரையிற்சுற்றி விழித்த கண் இமைக்குமுன் மறைந்தோடும் வலியுடைய கள்வரையும் சடிதியிற்பிடித்துக்கொள்ளும் ஆற்றலுடையவர்."

தேசமனைத்தையும் ஆட்சிபுரிந்தமன்னன் தன் நாட்டையும் தான் போரிற்கவர்ந்த நாட்டையும் பல மண்டலங்களாகப் பகுத்துத் தன் இனத்தாரையாவது வென்ற வேந்தரையாவது தனக்குட்சிற்றரசர்களாக்கி அவற்றை ஆண்டுவருமாறு செய்தான். ஒரு

மண்டலம் பலவளநாடுகளைக்கொண்டதாகவும் ஒரு வளநாடு பல நாடுகளையுடையதாகவும் ஒரு நாடு பல சதுர்வேதிமங்கலங்களையும் சில தனியூர்களையுமுடையதாகவும் இருந்தன. கிராம சபைகளை நியமித்தற்பொருட்டுச் சதுர்வேதிமங்கலமும் தனியூரும் பல குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. தொண்டை மண்டலத்தில் வளநாடுகள் கோட்டங்கள் என்றும் நாடுகள் கூற்றங்கள் என்றும் வழங்கப்பட்டுவந்தன. அக்காலத்தில் கிராம ஆட்சி முழுவதும், கிராமத்திலுள்ள மக்களுள் பொறுக்கப்பட்ட முப்பது அங்கத்தினரைக்கொண்ட ஒரு மகா சபையாரால் நடத்தப்பெற்றுவந்தது. சிறு கிராமங்கள் சிலவற்றைச் சேர்த்து ஒரு சதுர்வேதிமங்கலம் என்று பெயரமைத்து அச்சதுர்வேதிமங்கலத்தை முப்பது குடும்புகளாகப்பிரித்துக் குடும்பு ஒன்றுக்கு ஒருவர் வீதம் முப்பது அங்கத்தினரைப் பொறுக்கிக் கிராமசபையை அதிகாரிகள் அமைத்துவந்தனர். இவர்களுள் ஐவர் நீதிபரிபாலனம் புரியும் அறங்கூறவையத்தாராகவும் இருந்தனர். மற்றையோருள் தேவதானம், பிரமதேயம் முதலான இறையிலிகள் அடங்கிய அறநிலையங்களைப் பாதுகாப்போர் ஐவராகவும், தோட்டம் முதலியவற்றை மேற்பார்ப்போர் ஐவராகவும், குளம், துரவு, ஊருணி முதலான நீர்நிலையங்களைக் காப்போர் ஐவராகவும், நாணயப்பாதுகாவலர் ஐவராகவும், மற்றைச் சில்லறை விஷயங்களைக் கவனிப்போர் ஐவராகவும் இருந்தனர். இச்சபையினர் எல்லோரும் ஒவ்வோர்



ஆண்டே அதிகாரஞ்செலுத்திவந்தனர். சேனாதிபதிகளும் அமைச்சர்போன்ற அரசியல் அதிகாரிகளும் நாட்டைச் சுற்றிப்பார்த்துவருங்கால் கிராம சபைகளையும் கவனித்து இன்றியமையாதவற்றைச் செய்துவருவது வழக்கம். நியாயத்திற்கு முரண்பட நடக்கும் கிராம சபையார்க்குத் தண்டம்விதிக்கவும் அன்னோரைச் சபையினின்று விலக்கவும் இவ்வதிகாரிகளுக்கும் அதிகாரம் உண்டு. ஆனால், சபையினர் பெரும்பான்மையோருடைய கருத்திற்கிணங்கவே அரசன் இராஜ்ய பரிபாலனம் புரிந்துவந்தான். கிராம சபையில் அங்கத்தினராக வருவதற்குரியவர் அந்தக் கிராமத்திலே வசிப்பவர்களாகவும், 35 வயதிற்குமேற்பட்டவர்களாகவும், கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவும் எவ்வகைக் குற்றங்களையும் செய்யாதவர்களாகவும், குற்றம்புரிந்தோர்க்கு உறவினரல்லாதாராகவும் இருத்தல்வேண்டும். ஒவ்வொரு குடும்பிலும் இப்படிப்பட்டவராயுள்ளவர்களது பெயர்களைப் பொறுக்கிச் சிறிய ஓலைச்சீட்டுக்களில் தனித்தனியாக எழுதி ஒவ்வொரு குடும்பிற்கும் தனித்தனியான கட்டுக்கள் கட்டிவைக்கப்படும். பின்னர், சபை நியமனத்திற்குக் குறிப்பிடப்பட்டுள்ளநாளில் கிராமத்திலுள்ள மக்கள் எல்லோரும் குறைவறக் கூடியுள்ள கோயில் மண்டபத்தில் வயதுமுதிர்ந்த ஆதிசைவ அந்தணர் ஒருவர் எழுந்து ஒரு கட்டைப்பிரித்து ஒரு குடத்தில் போட்டு நன்றாய்க்குலுக்கி ஒரு சிறுவனை அழைத்து அக்குடத்திலுள்ள ஓலைச்சீட்டுக்

களில் ஒன்றை எடுப்பித்து அதில் வரைந்துள்ள பெயரைப் படித்துக்காட்டுவர். அப்பெயருடையார் புதிய வருடத்திற்குச் சபையின் அங்கத்தினராக அங்கீகரிக்கப்படுவர். இங்ஙனமே மற்றைக் குடும்பிலுள்ள மக்களிலிருந்தும் அங்கத்தினர் பொறுக்கப்படுவர். இவ்வங்கத்தினர் சம்பளம் பெறுமலே தம்தம் கடமைகளைச் செய்துவந்தனர். ஆனால், சபையின் கணக்கெழுதும் கரணத்தானுக்குச் சம்பளம் உண்டு. கிராம ஊழியர்களான குடிமக்களுக்குக் கிராமங்களில் இறையிலி நிலங்கள் விடப்பட்டிருந்தன.

கிராம சபையார் நீதி பரிபாலனம் புரியுங்கால், குற்றஞ்செய்தோர்க்குப் பொன் தண்டம் விதித்தல், கோயிலிலுள்ள சில சந்நிதிகளுக்கு நெய்விளக்கிடுமாறு உத்தரவு செய்தல் முதலான தண்டனைகளே அவர்களால் விதிக்கப்பட்டுவந்தன. கொலைத்தண்டனைமாத்திரம் அரசனால் விதிக்கப்படுதல் வழக்கம். மற்றையனவெல்லாம் சபையார் விதிக்கற்குரியனவாயிருந்தன.

கிராமங்களில் நிலங்கள் விற்கப்படும்போது விற்கிறவர்களும் வாங்குகிறவர்களும் கிராம சபையாரிடஞ் சென்று தம்முள் விலையாக நிச்சயித்த பொருளையும் விற்கப்படும் நிலத்தையும் எடுத்துக்கூறித் தம் சம்மதத்தையும் தெரிவித்தல்வேண்டும். சபையார் அவற்றை அங்கீகரிப்பார்; கரணத்தான் முதலானோர் சாட்சிகளாக ஆவணத்தில் கையெழுத்திடுவர். இச்சபைக்கு ஆவணக்களரி என்று பெயர்.



அக்காலத்தில் தமிழ்மன்னர்கள் தம் நாட்டிலுள்ள குடிகளிடம் நிலவரியாக ஆறிலொரு கடமையே வாங்கிவந்தனர். இவ்வாறிலொரு கடமையும் பெரும்பாலும், தானியமாக வாங்கப்பட்டுவந்தது. தானியத்திற்குரிய விலைப்பொருளைப் பொன்காசாகக் கொடுக்க விரும்பினோர் அவ்வாறே கொடுக்கலாம். கிராமத்திலுள்ள சபையார் இவற்றை மக்களிடமிருந்து வசூலித்து அங்குள்ள பொக்கசசாலையில் சேகரித்துவைத்துப் பின்னர் அரசனது தலைநகரிலுள்ள பெரிய பொக்கசசாலைக்கு அனுப்புவது வழக்கம்.

ஒவ்வொரு கிராம சபையாரும் அனுப்பிய நிலவரிப் பொருள்களையும் பிறவரிப் பொருள்களையும் நன்கு விளக்கக்கூடிய கணக்குகள் வைக்கப்பட்டிருந்தன. இக்கணக்குகளைச் சில அதிகாரிகள் அடங்கிய ஒரு சபையார் எழுதிவைத்து நிர்வகித்துவந்தனர். இச்சபைக்கு, *புரவரித்திணைக்களம் என்ற பெயர் வழங்கிவந்தது. இச்சபையில் புரவரித்திணைக்களநாயகமாக ஒருவரும், கண்காணியாக ஒருவரும், வரிப்புத்தகமாக ஒருவரும், முகவெட்டியாக ஒருவரும், பட்டோலையாக ஒருவரும் இருந்துவந்தனர். இவர்

*புரவரித்திணைக்களம் = The Board of Revenue.
புரவரித்திணைக்களநாயகம் = The President of the Board.
,, கண்காணி = The Superintendent.
,, வரிப்புத்தகம் = The Registrar of Taxation.
,, முகவெட்டி = The Keeper of the Index.
,, பட்டோலை = Record Keeper.

கள் எல்லோரும் அரசன் தன் நாட்டைச் சுற்றிப் பார்த்துவருங்கால் அவனோடு உடன்செல்லும் கடமையுடையவர்களாதலின் உடன் கூட்டத்ததிகாரிகள் என்றும் அழைக்கப்பட்டுவந்தனர். அன்றியும் வேந்தனோடு உடன்செல்லும் * திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம், திருவாய்க்கேள்வி முதலான அரசியல் அதிகாரிகளும், உடன்கூட்டத்ததிகாரிகள் என்று அழைக்கப்படுவர்.

மேலே கூறியுள்ள நிலவரியொன்று நீங்க, பிற வரிகளும் மக்களிடம் வசூலிக்கப்பட்டுவந்தன. பூ, எலுமிச்சை, கமுகு, வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, வாழை, தென்னை முதலியவற்றிற்கும் வரியுண்டு. காசுவரி, தறிவரி, செக்குவரி, தட்டாரப்பாட்டம், ஒழுகுநீர்ப்பாட்டம், வழியாயம், இனவரி, இடைவரி, உப்பாயம், ஈழம்பூட்சி முதலிய தொழில்வரிகளும் முற்காலத்தில் ஏற்பட்டிருந்தன. கடற்கரைப் பட்டினங்களில் ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளுக்குச் சுங்கவரியுண்டு. இச்சரக்குகள் சுங்கச்சாலைகளுக்குக் கொண்டுவரப்பட்டு அரசனது முத்திரையிடப்பெற்று வரி செலுத்தப்பட்டபின் வியாபாரசாலைகளுக்கு அனுப்பப்பட்டன. அக்காலத்தில் பொற்

* திருமந்திர ஓலை = Private Secretary.
திருவாய்க்கேள்வி = Attendants who communicate the Royal commands,



காசுகளை நாணயமாக வழங்கின என்பது கவனிக்கத்தக்கது.

அக்காலத்தரசர்கள் கருணையுடன் ஏழைகளை ஆதரித்தனர். அந்தணர், புலவர், பாணர், கூத்தர் முதலியவர்களுக்கு மானிய நிலங்களும் பரிசில்களும் அளிக்கப்பட்டன. அரசர்கள், வரிப்பொருள்களை அதிகாரிகளுக்குச் சம்பளங்கொடுத்தல், தரைப்படை கடற்படைகளைச் சேகரித்தல், ஆறு குளம் கால்வாய்களை வெட்டுதல், நகரங்களும் ஆலயங்களும் அமைத்தல், பஞ்சகாலங்களில் குடிகளுக்கு விவசாயத்துக்கும் ஜீவனத்திற்கும் உதவுதல், பள்ளிக்கூடம் வைத்தியசாலை முதலியவற்றை நடத்துவதற்குப் பொருளீதல் முதலியவற்றில் செலவிட்டுவந்தனர். போரிற்கிடைத்த பொருளையும் சிற்றரசர்களது இறைப்பொருளையும் தேவாலயங்களிலும் தானதர்மங்களிலும் செலவிட்டனர்.

## அதிகாரம் IV.

# ஐம்பெருங்காவியங்கள்.

தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங்காவியங்கள், மணிமேகலை, சிலப்பதிகாரம், சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. இவற்றுள் வளையாபதியும் குண்டலகேசியும் இதுகாறும் கிடைக்கப்பெறாமையின் இறந்துபோன காவியங்களாகக் கருதப்படுகின்றன. எஞ்சிய மூன்றும் வெளிவந்துள்ளன. இவை சொல்லழகும் பொருளழகும் ஒருங்கே அமையப்பெற்றுப் படிப்போர் மனத்தைக் கவருந்தகையவாகி இன்சுவையோடு மிளிர்வன. இவற்றுள், மணிமேகலையை இயற்றியருளியவர் மதுரையில் நிலவிய கடைச்சங்கப்புலவருள் ஒருவராகிய கூலவாணிகன் சாத்தனார் என்ற பெரியார்; சிலப்பதிகாரத்தைப் பாடியவர் சேரமன்னனாகிய செங்குட்டுவனது இளைய சகோதரரும் முற்றத்துறந்த முனிவருமாகிய இளங்கோவடிகள் என்பார். சிந்தாமணியாசிரியர் சோழர்குலத்துதித்தவராகிய திருத்தக்கதேவர் என்ற புலவர் பெருந்தகையார்.

### 1. மணிமேகலையின் சுருக்கம்.

காவிரிப்பூம்பட்டினத்திலே பெருங்குடி வாணிகர்மரபிலே கோவலன் என்ற வணிக குமரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அந்நகரத்தில் வாழ்ந்த



மாதவி என்னும் நாடகக்கணிகையின்பால் மணிமேகலை என்பாள் பிறந்திருந்தனள். இவள் தாயாகிய மாதவி தன் காதலனாகிய கோவலன் மதுரையில் கொலையுண்டமை கேட்டுத் தன் குலத்தொழிலை முற்றும் வெறுத்துப் பௌத்த முனிவராகிய அறவண வடிகளிடம் ஞானோபதேசம் பெற்றுப் 'பிக்ஷுணி ஆயினள்.' அவள் மகளாகிய மணிமேகலையும் தன் தாயுடன் பழகிவந்தமையால் சிறுபருவத்தில் பௌத்த தருமத்தில் உணர்ச்சியுடையவளாயிருந்தாள். ஒரு நாள், இவள் தன் தாயின் கட்டளைப்படி தோழியாகிய சுதமதியோடு பூக்கொய்தற்கு உபவனஞ்சென்றாள். இவளை விரும்பிச் சோழன் கிள்ளிவளவன் மகனாகிய உதயகுமரன் அங்குச்செல்ல, இவள் அச்சமுடையவளாய் அங்கிருந்த பளிக்கறையொன்றிற் பதுங்கியிருந்து அவன் சென்றபிறகு வெளியேவந்தாள். பின்னர், இவளது குலதேவதையான மணிமேகலாதெய்வம் மணிபல்லவம் என்ற தீவிற்கு இவளை அழைத்துப்போயிற்று. அத்தீவிற்குச்சென்ற மணிமேகலை அங்குள்ள புத்தபீடிகைக் காட்சியால் தன் முற்பிறப்பையும் உதயகுமரன் தம் பழம்பிறப்பில் கணவனாயிருந்தவன் என்பதையும் அறிந்துகொண்டாள்; அன்றியும் அத்தெய்வம் உணர்த்திய மூன்று மந்திரங்களையும் அறிந்துகொண்டாள். பிறகு அவள் கோமுகியென்னும் பொய்கையையடைந்து அதிலிருந்த அமுதசுரபி என்னும் அட்சயபாத்திரத்தைப் பெற்றுக் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து அறவண அடிகளை வணங்கி

னான். அவர் ஆபுத்திரன் அமுதசுரபி இவர்களின் வரலாற்றை அவளுக்குக்கூறிப் பசித்தோர்க்கு உணவளித்தலின் சிறப்பையும் உணர்த்தினார். அவற்றைக் கேட்ட மணிமேகலை அமுதசுரபியைக் கையிலேந்தி வீதியிற்செல்ல ஆதிரை என்பாள் முதலிற்பிச்சையிட்டாள். பிறகு மணிமேகலை அவ்வமுதசுரபியினின்று எடுத்தளித்த உணவால் காயசண்டிகை என்னும் வித்யாதரமங்கையின் தீராப்பசிதீர்த்து, அந்நகரத்திலிருந்த உலகவறவி என்னும் அம்பலத்தையடைந்து அங்குவந்தோரது பசியைப்போக்கிவந்தாள். இதனையுணர்ந்த உதயகுமரன் அவளை விரும்பி அவ்விடம் வர, மணிமேகலை அவன் தன்னை அறியாதவாறு தான் பெற்ற மந்திரவலியால் காயசண்டிகை வடிவங்கொண்டு நகரத்துச் சிறைச்சாலைக்குச்சென்று ஆங்குப் பசித்திருப்போர்க்கு உணவளித்துச் சிறைச்சாலையை அறச்சாலையாக்கினாள். அப்போதும் அவளைத் தொடர்ந்த உதயகுமரன் காயசண்டிகையின் கணவனாகிய வித்யாதரனால் தன் மனைவியை விரும்பி வந்தவனாகக் கருதிக் கொல்லப்பட்டான். இதனையறிந்த மணிமேகலை மனங்கலங்கி வருந்தவே கந்திற்பாவைத் தெய்வம் அவளுக்குத் தேறுதல் கூறிற்று. உதயகுமரனது தந்தையாகிய கிள்ளிவளவன் மணிமேகலைபால் சந்தேகங்கொண்டு அவளைச் சிறைவைத்தான். பிறகு, இராசமாதேவியின் முயற்சியால் சிறையினின்றும் விடுபட்டனள். பின்னர் மணிமேகலை சாவக நாட்டுள்ள நாகபுரஞ்சென்று அந்நாட்டரசன் புண்



ணியராசனோடு மணிபல்லவமடைந்து அங்குள்ள புத்த பீடிகையை அவனுக்குக்காட்டி அவனது பழம் பிறப்பை அறிவித்தாள். அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினம் கடல் கொள்ளப்பட்டதென்றும் தன் தாயும் அறவணவடிகளும் வஞ்சிமாநகரில் இருக்கின்றனர் என்றும் அறிந்து வஞ்சிக்குச்செல்ல எழுந்த மணிமேகலை முதலில், செங்குன்றாரிலுள்ள கண்ணகி கோட்டத்திற்குப்போய்ப் பத்தினிக்கடவுளை வணங்கி எதிர்காலச் செய்திகளையுணர்ந்தாள். பிறகு, அவள் வஞ்சிநகரத்துள்புகுந்து பல சமயவாதிகளோடு அளவளாவி அவ்வச்சமய உண்மைகளை உணர்ந்துகொண்டனள். அதன்பிறகு அந்நகரத்திலுள்ள பௌத்த விகாரத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த கோவலன் தந்தை மாசாத்துவானைக்கண்டு வணங்க, அவன் அவள் தாயும் அறவணவடிகளும் காஞ்சிமாநகரஞ் சென்றிருத்தலையும் அங்கு மழையின்மையால் உயிர்கள் வாடுவதையும் கூறி அவளை அந்நகரத்திற்குச் செல்லுமாறு வற்புறுத்தினான். பாட்டன் கூறியவற்றைக் கேட்ட மணிமேகலை உடனே காஞ்சிமாநகரத்திற்குப்போய் அந்நகரிற் பசியால் வருந்தும் உயிர்களுக்கு உணவளித்துத் தன் தாயுடன் அறவணவடிகளையும் வணங்கி அவ்வடிகளால் பௌத்தமத தர்மங்களனைத்தும் உபதேசிக்கப்பெற்றுப் பின்னர் வீடு பெறுதற்பொருட்டு அக்காஞ்சிமா நகரத்திலேயே தவஞ்செய்துகொண்டிருந்தனள்.

## 2. சிலப்பதிகாரக் கதையின் சுருக்கம்.

••OOO••

சோழவள நாட்டிலே காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்ததும் சோழர்களது பழைய தலைநகருமாகிய காவிரிப்பூம்பட்டினத்திலே மாசாத்துவான் என்னும் ஒரு வணிகர் தலைவன் வாழ்ந்துவந்தான். அவன் தன் மகன் கோவலனுக்கு மாநாய்கன் என்ற வணிகன் மகள் கண்ணகியை மணம்புரிவித்துத் தனி மாளிகையில் அவர்கள் வாழ்ந்துவரும்படி செய்தான். அவ்விருவரும் இனிமையாக இல்லறம் நடத்திவந்தனர்.

அங்ஙனம் நிகழ்ந்துவருங்கால் கோவலன் மாதவி என்ற நாடகக்கணிகையினிடம் விருப்பங்கொண்டு தன் பொருள்களை நாளும் அவள்பொருட்டுச் செலவிட்டு அவளுடன் மகிழ்ந்து வருவானாயினன். முன் கதையிற்கூறிய மணிமேகலை இவர்களின் மகளே. இஃது இங்ஙனமாக, சோழர்கள் இந்திரன்பொருட்டு ஆண்டுதோறும் நிகழ்த்தும் இந்திரவிழா அக்காலத்து நடைபெற்றது. அதன் இறுதியில் நகரமாந்தர் வழக்கம்போலக் கடலாடச் சென்றனர். கோவலனும் மாதவியை அழைத்துக்கொண்டு கடலாடுதற்குச் சென்றான். கடற்கரைக்குச் சென்ற இவ்விருவரும் ஓரிடத்திற்றங்கி இனிய பாடல்களைப் பாடிக்கொண்டு யாழ் வாசித்தனர். கோவலன், மாதவி பாடிய பாடல்



களால் அவளிடத்து ஐயமுற்று விரைவில் அவளைத் துறந்து தன்மனையடைந்தான். பின்னர், அவன் கண்ணகியுடன் மதுரையையடைந்து அவள் காற்சிலம்பை விற்றுவரும்பொருளை முதலாகக்கொண்டு வாணிகஞ்செய்து பொருள்தேட எண்ணினான். அங்ஙனமே அவ்விரவின்கடையாமத்தில் அவ்விருவரும் மதுரைக்குப் புறப்பட்டனர். வழியில் ஒரு சோலையில் மதுரைக்குச் செல்லச் சித்தமாயிருந்த கௌந்தியடிகள் என்ற ஜைனப்பெண்பால் துறவியும் அவர்களைக்கண்டு பரிவுற்று உடன்புறப்பட, எல்லோரும் உறையூர், கொடும்பாளூர் இவற்றின் வழியாகச் சென்று வையையாற்றைக்கடந்து மதுரைமாநகரின் மதிற்புறத்துள்ள ஒரு ஜைனமுனிவரிருக்கையில் தங்கினார்கள்.

மறுநாட்காலையில் கோவலன் மதுரைமாநகருக்குள் சென்று அதன் வளங்களைக்கண்டு மகிழ்ந்து திரும்பினான். அப்போது கௌந்தியடிகள் தம்மிடம் வந்த இடைச்சியர் தலைவியாகிய மாதரி என்பவளது உத்தம குணங்களையறிந்து அவள்பால் கண்ணகியை அடைக்கலமாக ஒப்பிக்க, அவளும் மகிழ்வுடன் ஏற்றுக் கண்ணகியையும் கோவலனையும் அழைத்துக்கொண்டுபோய் ஆயர்பாடியிலுள்ள தன் மனையொன்றில் அவர்களையமர்த்திச் சமைத்துண்ணற்குரிய பண்டங்களும் அளித்துத் தன் மகள் ஐயையைக் கண்ணகிக்குத் துணையாகவும் வைத்து மிகவும் உபசரித்தாள்.

சமைத்துண்ட பின்னர், கோவலன் கண்ணகியை யழைத்துத் தான் அவர்கட்குமுன் செய்த தவறு களைக்கூறி வருந்தி, பிறகு அவளது அருமையைப் பாராட்டித் தான் வருமளவும் ஆற்றியிருக்கச் செய்து அவள் காற்சிலம்பொன்றை விற்கும்பொருட்டு எதிரில்காணப்பட்ட நிமித்தங்களையும் அறியாதவனாகி ஆவணவீதியுட்புகுந்தான். அங்ஙனம் புகுந்தவன், பொற்கொல்லர் நூற்றுவர் பின்தொடரச் செல்லும் அரண்மனைப் பொற்கொல்லன் ஒருவனைக்கண்டு, தன் சிலம்பை அவனுக்குக்காட்டி அதனை விலைமதிக்கச் சொன்னான். அப்பொற்கொல்லன் அரண்மனையில் இத்தகைய சிலம்பொன்றை முன்னமே கவர்ந்துசென்றவன். அவன் அச்செய்கை வெளிப்படுமுன் அதனைத் திருடிச்சென்றவன் கோவலனே என்று காட்டிவிடுதல் நலமென்று கருதி விரைவில் அரண்மனைக்குச் சென்று அரசனை வணங்கிச் சிலம்பைத் திருடியவன் தன்மனையில் வந்திருப்பதாகக் கூறினான். அரசன் ஊழ்வினையின் வயப்பட்டவனாய்க் காவலாளரையழைத்துக் கள்வனைக்கொன்று சிலம்பைக் கொணருமாறு உத்தரவிட்டான். பொற்கொல்லன் தன் எண்ணம் நிறைவேறிற்று என்று மகிழ்ந்து அவர்களை அழைத்துச் சென்று கோவலனைக் காட்டினான். கோவலனது முகக்குறியைக்கண்ட அக்காவலாளர் அவன் கள்வன் அல்லன் என்று கூறப் பொற்கொல்லன் மறுத்துரைத்து அவன் கள்வனே என்று வற்புறுத்திப் பேசினான். இந்நிலையில் கொலையஞ்சாத பாதகன் ஒருவன்



கோவலனை வெட்டி வீழ்த்தினான். இச்செய்தி ஊரெங்கும் பரவியது. ஆயர்பாடியில் குரவைக்கூத்து ஆடப்பட்டவிடத்திலிருந்த கண்ணகி இதனைக் கேட்டுப் பதைபதைத்துப் பலவாறு புலம்பித் தானும் தன் நாயகனுடன் இறக்கத் துணிந்து தன்பாலுள்ள மற்றொரு சிலம்புடன் மிகுந்த சீற்றத்தோடு கண்டோர்நடுங்குமாறு வீதிவழியேசென்று வெட்டுண்டு கிடந்த கோவலனைச் சிலர் காட்டக் கண்டு அவனுடம்பைத்தழுவி அளவிலாத்துன்பத்துள் ஆழ்ந்து பலவாறுபுலம்பினாள்.

பிறகு அவள் கோபந்தணியப்பெறுதவளாய்ப் பாண்டியன் நெடுஞ்செழியன்பாற்சென்று தன் நாயகன் கள்வன் அல்லன் என்பதை மெய்ப்பித்து ஆராயாது தீயகாரியத்தைப் புரிந்த அவனது கொடுங்கோன்மையையும் எடுத்துக் கூறினாள். அதனைக் கேட்ட பாண்டியன் தன் பிழைக்காக வருந்திச் சிங்காதனத்திலேயே உயிர்துறந்தான். அவன் இறந்த செய்தியையுணர்ந்த கோப்பெருந்தேவியும் உயிர்நீங்கினள். அதன் பின்னரும் கண்ணகி முன் கொண்ட கோபம் சிறிதும் தணியாளாய் அந்நகரைத் தீயினால் அழிந்தொழியச் செய்தாள். அங்ஙனமே அந்நகருள் தீப்பற்றிக்கொண்டு பலவிடங்களையும் எரித்தது. அச்சமயத்தில் அங்குத் தோன்றிய மதுராபதித் தெய்வத்தால் தன் பழம்பிறப்பை யுணர்ந்ததோடு எல்லாம் ஊழ்வினையால் நிகழ்ந்தவை என்பதையும் அறிந்து உண்டியும் உறக்கமுமின்றி மதுரையைநீங்கி வையைக்

கரை வழியேசென்று சேரநாட்டிலுள்ள செங்குன்று என்னும் மலைமேலேறிக் கோவலனிறந்த பதினான்கா நாளிரவில் அங்குவந்த விமானத்தில் தெய்வ வடிவமுடைய அவனைக் கண்டு மகிழ்ந்து தானும் தெய்வவடிவினளாகி அவனோடு விண்ணுலகஞ் சென்றாள்.

சேரநாட்டு மன்னனாகிய செங்குட்டுவன் இச்செய்தியைத் தன்னாட்டுக் குறிஞ்சிநிலமாந்தர் சொல்ல அறிந்து பெரிதும் வியப்பெய்தி, பத்தினிப்பெண்ணாகிய கண்ணகிக்கு ஒரு கோயில் எடுப்பித்து அவளைப் பாராட்ட எண்ணினான். அதற்காக அவ்வேந்தன் வடநாடுசென்று இமயமலையினின்றும் ஒருகல்கொணர்ந்து அதனைக் கங்கையில் நீராட்டிப் பகையரசர் முடித்தலையில் ஏற்றித் தன் நாட்டிற்குக் கொண்டுவந்து அதில் கண்ணகியின் வடிவத்தை அமைப்பித்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து வணங்கினான். இவ்வேந்தனது தம்பியாராகிய இளங்கோவடிகள் என்பார் கண்ணகியின் வரலாற்றைச் சிறந்த காவியமாகப்பாடி அதற்குச் சிலப்பதிகாரம் என்று பெயரிட்டனர்.

## 3. சிந்தாமணிக் கதைச் சுருக்கம்.

இப்பரத கண்டத்தில் ஏமாங்கத நாட்டிலுள்ள இராசமாபுரத்திற் சச்சந்தன் என்னும் ஒரு வேந்தன் இருந்தான். அவனது மனைவி விதையதேசத்தரசனாகிய ஸ்ரீதத்தன் மகள் விசயை என்பாள். ஏமாங்கதத்



தில் அவன் அரசு செலுத்திவரும்நாளில் வினைவயத்தால் கட்டியங்காரன் என்னும் அமைச்சனிடம் அரசியலை ஒப்பித்து நாட்டைக் காத்துவருமாறு செய்து தான் அந்தப்புரத்தில் இனிது காலங்கழித்து வந்தான். பட்டத்தரசியாகிய விசயை கருப்பமுற்றனள். அந்நாளில் கட்டியங்காரன் அரசனைக் கொன்று நாட்டைத் தானே ஆளக்கருதி அரசனிருக்கும் அந்தப்புரத்தைச் சேனைகளோடு வளைந்துகொண்டான். அரசன் அதனை வாயிற்காவலாளனால் அறிந்து, மனங்கலங்கிய மனைவியைத் தேற்றி, அவளை முன்னரே செய்து வைத்திருந்த மயிற்பொறிமேலேற்றிப் புத்திரப்பேற்றைக்கருதி ஆகாயவழியே வேறிடஞ்செல்ல விடுத்தனன். பின்னர் அவன் புறம்போந்து கட்டியங்காரனோடும் படைவீரரோடும் போர் செய்து உயிர்துறந்தான். பிறகு கட்டியங்காரன் வெற்றிமுரசறைவித்து எல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டான்.

ஆகாயவழியே சென்ற விசயை அம்முரசொலி கேட்டுக் கலங்கி மயிற்பொறியை முறுக்கி நடத்தா மூர்ச்சித்தாள். அப்பொறி அப்பால் செல்லமாட்டாமல் அந்நகரத்தைச் சார்ந்த ஒரு மயானத்தில் மெல்ல வீழ்ந்தது. உடனே அவள் அவ்விடத்துச் சுபகாலத்தில் ஓர் ஆண்மகவைப் பெற்றுத் தனியேயிருந்து வருந்திப் புலம்பினாள். அம்மயானத்துள்ள ஒரு தெய்வத்தின் ஆணையின்படி அவள் குழந்தையை அங்கே கிடத்திவிட்டு அண்மையில் மறைந்துகொண்டிருந்

தாள். இறந்த தன் குழந்தையைப் புதைக்க அங்கே வந்த ஒருவணிகன் அம்மகவைக்கண்டுமகிழ்ந்து அதன் விரலிலுள்ள மோதிரத்தால் இராச புத்திரன் என்று அறிந்து ஒருவரும் அறியாதவாறு எடுத்துச் சென்று வளர்த்துவந்தான். கந்துக்கடன் என்னும் அவ்வணிகன் அவனுக்குச் சீவகன் என்று பெரியோர் கூறிய பெயரிட்டுச் சிறந்த ஆசிரியர் ஒருவரிடம் கல்விபயின்று வருமாறு செய்தான். சீவகன் எல்லாக் கலைகளையும் பயின்று வில்வித்தையிலும் வல்லவனாய் விளங்குவதைக்கண்ட அவனது ஆசிரியர் மிகவும் மகிழ்ச்சியுற்று அவனுக்குத் தருமோபதேசம் செய்து அவனது வரலாற்றையும் கட்டியங்காரனது தீச்செயலையும் எடுத்துரைத்துக் கோபத்தை யடக்கிக்கொண்டு ஓராண்டு வரை அச்செய்திகளை வெளியிடாமல் பொறுத்துக் கொண்டிருக்குமாறும் கூறினார். அங்ஙனமே நடந்து வந்த சீவகன் ஒருநாள் காந்தருவதத்தை என்பவளை இசையில்வென்று மணஞ்செய்துகொண்டான். இதனால் கட்டியங்காரன் சீவகனிடம் பொறாமைகொண்டு பகைபாராட்டிப் பலவழியாலும் இடுக்கண்விளைத்தான்; பெருவீரனாகிய சீவகன் இவற்றையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் அரியேறாய் உலாவியதோடு குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை என்ற நால்வரையும் மணந்துகொண்டு இனிது வாழ்ந்தனன். பின்னர், அவன் தன் தாயாகிய விசயமாதேவி துறவுபூண்டு தவம்புரிந்துகொண்டிருப்பதைத் தன் தோழரால் உணர்ந்து அங்குச்சென்று தாயைவணங்கி மகிழ்ச்சி



யுற்றான். பிறகு, அவன் தன் தாய் கூறிய அரிய செய்திகளைக்கேட்டுக்கொண்டு இராசமாபுரஞ்சென்று விமலை, சுரமஞ்சரி ஆகிய இருவரையும் மணம்புரிந்து உவகையுற்றான். பின்னர், சீவகனது மாமன்மகளாகிய இலக்கணையை மணந்துகோடற்குத் திரியன்றி எய்ய வந்து அதனைச் செய்து முடிக்கும் ஆற்றலின்றிநின்ற கட்டியங்காரனோடு சீவகன் அங்கேயே போர்புரியத் தொடங்கினான். அப்போரில் சீவகன் கட்டியங்காரனையும் அவனது நூறு புதல்வர்களையும் கொன்றொழித்தனன். அவன் தாயாகிய விசயமாதேவி அதனைக் கேட்டு மகிழ்ந்தாள்; எல்லோரும் அவனைப் புகழ்ந்தனர். பிறகு, சீவகன் ஒரு நன்னாளில் ஏமாங்கதநாட்டிற்கு அரசனாக மணிமுடிசூடி நீதிவழுவாது யாவரும் இன்புற இராசமாபுரத்திலிருந்து அரசு செலுத்தி வருவானாயினன். அதன்பிறகு அவன் தன் மாமன் மகளாகிய இலக்கணை என்பாளையும் மணஞ்செய்து கொண்டான். பின்னர், சீவகன் தன்னை வளர்த்த வணிகனுக்கு அரசுரிமையளித்ததோடு தோழர்கள் எல்லோரையும் குறுநிலமன்னர்களுமாக்கினான். அவன் ஆட்சிக் காலத்தில் மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ்ந்துவந்தனர். அவனது மனைவியர் எண்மருக்கும் எட்டுப்புதல்வர்கள் பிறந்தனர். அரசன் அவர்களுக்குப் பலகலைகளையும் கற்பித்து மேன்மையுறச் செய்தான். பிறகு, அம்மன்னன் சாரணர் இருவரால் உலக நிலையாமையையும் வீட்டிலக்கணங்களையும் உணர்ந்து அரசாட்சியில் விருப்பமில்லாமல் அதனைத் தன்மகனாகிய சச்சந்தனிடம் ஒப்பித்துவிட்டுத் துறவுபூண்டு இறுதியில் முத்தியெய்தினான்.

# அதிகாரம் V.

## சங்கப் புலவர்கள்.

முற்காலத்தில் பாண்டிநாட்டில் தமிழ் வளர்ச்சியின்பொருட்டு வெவ்வேறு காலங்களில் நடைபெற்ற தமிழ்ச் சங்கங்கள் மூன்றாகும். அவற்றுள் பாண்டியன் தலைநகராயுள்ள மதுரையில் நடைபெற்ற சங்கம் கடைச்சங்கம் எனப்படும். இச்சங்கம் இற்றைக்கு ஆயிரத்தெழுநூறு ஆண்டுகட்குமுன்னரே முடிவுற்றது. இதில் புலவராகி விளங்கிய செந்தமிழ் அறிஞர்கள் சற்றேறக்குறைய ஐஞ்ஞூற்றுவர் ஆவர். இவர்கள் எல்லோரும் ஓர் ஊரினரும் அல்லர்; ஒரே குலத்தினரும் அல்லர்; ஒரே மதத்தினரும் அல்லர்; இவர்களுள் சைவர், வைணவர், பௌத்தர், சமணர் முதலான பலசமயத்தினரும் அந்தணர் முதல் குறவர் இறுதியாகவுள்ள பல சாதியினரும் இருந்தனர்; தமிழ்ப்புலமையிற் சிறந்தவர்களாய்ச் சில பெண்மணிகளும் இருந்தனர். இன்னோருள் பலர் தண்டமிழ்நாட்டினுள்ள பல்வேறு ஊர்களில் வசித்தவர்கள். ஐம்பதிற்குமேற்பட்டோர் மதுரைமாநகரிலே வசித்தனர். இவர்களுள் சிலர் தமிழகத்தினுள்ள சில ஊர்களிலிருந்து அங்குச் சென்று வசித்தவர்கள். இப்புலவர்கள் எல்லோரையும் சிறப்பாகப் பாண்டிய அரசர்களும் பொதுவாகச் சேர சோழ



வேந்தர்களும் மற்றைக் குறுநில மன்னர்களும் பெரிதும் போற்றி வேண்டியன அளித்துப் பாதுகாத்து வந்தனர். உண்மையுரைக்குமிடத்து அக்காலத்திய தமிழ்ப் புலவர்கள் அரிய பெரிய நூல்கள் எழுதிச் சிறந்து விளங்கியமைக்குக் காரணம் அவர்களைத் தம் கண்மணிபோலக் கருதி அன்புடன் புரந்துவந்த தமிழ் வேந்தர்களும் தமிழ் வள்ளல்களுமேயாவர். இவர்கள் அந்நாளில் பாடிய பாடல்கள் எண்ணிறந்தனவாகும். அவற்றுள் தற்காலத்தே கிடைத்துள்ளவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பவற்றுள் காணலாம். இவற்றைப் பாடிய புலவர்களுள் நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர், மாங்குடி மருதனார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், பாரதம்பாடிய பெருந்தேவனார், சீத்தலைச் சாத்தனார், மாமூலனார், ஔவையார் முதலானோர் நம்நினைவில் வைத்துக்கொள்ளுதற்குரிய அறிஞர்கள். இவர்களுள் நக்கீரர் ஒருகாலத்தில் சங்கத்தின் தலைமைப்புலவராக விளங்கியவர். முருகவேள்மீது திருமுருகாற்றுப்படை என்ற நூலும் பாண்டியன் நெடுஞ்செழியன்மீது நெடுநல்வாடை என்ற நூலும் பாடியவர்; ஒருபாடல்காரணமாகச் சிவபெருமானோடு வாதம் புரிந்தவர்; ஒருவரை ஆக்கவும் அழிக்கவும் பாடவல்ல தெய்விகப்புலவர். இவர் புறநானூற்றில் ஒரு பாட்டில் ஐரோப்பிய வியாபாரிகள் தமிழ் நாட்டிற்குக் குப்பிகளில் மதுவகைகளைக் கொணர்ந்து விற்றுவந்த செய்தியைக் கூறியுள்ளார். இவர் மேனாட்டாரை அப்பாட்டில் 'யவனர்' என்று குறித்துள்ளனர்.

கபிலர் பெருங்கொடை வள்ளலாகிய வேள் பாரிக்கு இனிய நண்பர்; குறிஞ்சி நிலத்தை உண்மைக்கு மாறுபாடின்றிச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவர்; இன்னாநாற்பது என்ற நீதிநூலை எழுதித் தமிழுலகத்திற்கு உபகரித்தவர். இவர்காலத்துப்புலவருள் இவர் மிகவும் சிறந்தவர். இறுதியில் இவர் தம் நண்பனாகிய பாரி இறந்தமைக்காகப் பெரிதும் வருந்தித் திருக்கோவலூரில் பெண்ணையாற்றங்கரையில் வடக்கிருந்து உயிர்துறந்தார்.

மாங்குடி மருதனார் என்பவர் தலையாலங்கானத்துப் போர்வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது அவைக்களப் புலவர்தலைவர். அச்செழியனும் தமிழ்ப் புலமையுடையவனாதலால் இப்புலவரிடத்து அவன் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் அளவிட்டுரைக்கத் தக்கனவல்ல. இவர் அவ்வரசன்மீது மதுரைக்காஞ்சி என்ற சிறந்த நூல் ஒன்று பாடியுள்ளனர். இது பத்துப்பாட்டுள் அடங்கியுள்ள ஒரு நூலாகும். இஃது உலகம், செல்வம், இளமை இவற்றின் நிலையாமையை அரசனுக்கு உணர்த்தி அறம்புரிந்து வீடுபெறுமாறு அவனுக்கு அறிவுறுத்தப் பாடப்பட்ட நூல் என்பர். மாமூலர் என்ற புலவர் முக்காலமுமுணர்ந்த யோகியாவர். இவர் இத்தமிழகத்தில் எவ்விடத்திலும் வசித்தவர்; அன்றியும் இதற்கப்பாலுள்ள பிறநாடுகளையும் போய்ப் பார்த்தவர். இவரே சமுத்திரகுப்தமௌரியன் திக்குவிஜயத்தையும் நந்தர்கள் பாடலிபுரத்தில்



கங்கையாற்றில் நிதியம் தொகுத்து வைத்திருந்த செய்தியையும் தாம் பாடியுள்ள பாடல்களில் கூறியுள்ளனர். இவரது பாடல்கள் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய அகநானூற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவரது பாடல்கள் அனைத்தும் அக்காலத்திய சரித்திர நிகழ்ச்சிகளைக் குறிப்பனவாயிருத்தல் பெரிதும் பாராட்டற்பாலதாம்.

ஔவையார் கடைச்சங்கத்திலிருந்த நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியல் நங்கையருள் ஒருவர். இவர் அதிகமான்நெடுமான்அஞ்சி என்ற வள்ளலுக்கு உற்ற நண்பர்; அவனால் கொடுக்கப்பெற்ற கருநெல்லிப் பழத்தையுண்டு அதனால் நெடுநாள் உயிர் வாழ்ந்தவர். இவர் ஆடல்பாடல்களில் வல்லவர்களாய் அக்காலத்துத் தமிழ்வேந்தர்களது அவைக்களத்தை அலங்கரித்துவந்த பாணர்வகுப்பைச்சேர்ந்தவர். இளைஞர்கள் கற்று அறிவுடையாதற்கு ஏற்ற ஆத்திசூடி முதலான சிறு நீதிநூல்களை இயற்றித் தமிழகத்திற்கு உதவிய பெருந்தகையாளர் இவரேயாவர்.

இனிக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பெற்ற சிறந்த நூல்களுள் முதன்மையானது திருக்குறள் என்பது. இதனையியற்றியவர் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் என்பார். இவர் மதுரைமாநகரிற்பிறந்து மயிலையில் வாழ்ந்துவந்தவர். இவர் எழுதியுள்ள திருக்குறள் என்ற நூல் தற்காலத்தில்

ஆங்கில முதலான பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்று எல்லா நாட்டிலுள்ள மக்களாலும் விரும்பிக் கற்கப்பட்டுவருவது ஒன்றே இதன் பெருமையையும் சிறப்பையும் நன்கு விளக்கும். இந்நூலுக்குப் பதின்மர் உரையெழுதியுள்ளனர். அவ்வுரைகளுள் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்ததென்பர். பண்டைக் காலத்துப்புலவர் ஒருவர், 'எல்லாப் பொருளும் இதன்பா லுளவிதன்பால், இல்லாத எப்பொருளும் இல்லை' என்று கூறி இந்நூலைப் போற்றிப் பாராட்டியிருப்பது ஈண்டு அறிந்துகொள்ளுதற்குரியதாகும்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவர் சோழன்கரிகாற்பெருவளத்தான்மீது பட்டினப்பாலை என்ற நூல் பாடியுள்ளார். இந்நூல் 301 அடிகளைக் கொண்ட ஓர் ஆசிரியப் பாவால் ஆயதாயினும் சொல்லழகினும் பொருளழகினும் சிறந்து படிப்போரது நெஞ்சத்தைப் பிணிக்குந்தன்மைவாய்ந்தது. இவ்வரிய நூலைப்பாடித் தன்புகழை உலகம் உள்ளவரை நிலைபெறச்செய்த புலவர் சிகாமணியாகிய உருத்திரங்கண்ணனார்க்கு நம் சோழர்பெருமான் பதினாறு இலட்சம் பொன் பரிசிலாக அளித்துப் பாராட்டினன். இச்செய்தி, 'தழுவு செந்தமிழ்ப் பரிசில்வாணர்பொன் பதினாறு நூறாயிரம்பெறப் பண்டுபட்டினப் பாலை கொண்டதும்' என்ற கலிங்கத்துப்பரணியின் பாடலால் நன்குணரப்படும். இந்நூல் காவிரிப்பூம்பட்டினச் சிறப்பையும் தமிழ்மக்களது பழைய நாகரிகத்தை



யும் வாணிக மேம்பாட்டையும் இனிது விளக்குவதோடு சோழன்கரிகாலனது பெருமையையும் எடுத்துரைக்கின்றது.

இந்நூலாசிரியராகிய உருத்திரங்கண்ணனார் சோழன்கரிகாலனது பேரனும் தொண்டைமண்டலத்தரசனும்ஆகிய தொண்டைமான் இளந்திரையன்மீது பெரும்பாணாற்றுப்படை என்ற நூல் பாடியுள்ளார். இதனால் நம்புலவர் இத்தமிழகத்தில் நீண்டகாலம் வாழ்ந்தவராதல் வேண்டும். இவர் பாடியுள்ள பெரும்பாணாற்றுப்படையில் காஞ்சியின் சிறப்பும் திருமால் எழுந்தருளியுள்ள திருவெஃகாவின் பெருமையும் தொண்டைமான் இளந்திரையனது பெருந்தகைமையும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இப்புலவர் பாடிய இவ்விரண்டு பிரபந்தங்களும் பத்துப்பாட்டைச்சார்ந்த நூல்களாகும். இப்பெரியார் கடியலூரில் பிறந்தவர் என்பதைத் தவிர இவரைப்பற்றிய பிற செய்திகள் புலப்படவில்லை. இக்கடியலூர் இப்பொழுது எவ்விடத்துள்ளது என்பதும் தெரியவில்லை.

பாரதம் பாடிய பெருந்தேவனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். அக்காலத்தில் பெருந்தேவனார் என்ற பெயருடையார் பலர் இருந்தமையின் அவர்களிலிருந்து இவரைப் பிரித்துக்காட்டும்பொருட்டுப் பாரதம்பாடிய என்ற அடைமொழி இவரது பெயருக்குமுன்சேர்க்கப்பட்டுளது. இவர் பாரதத்தை

வெண்பாவில் பாடியுள்ளனர். இவரது நூல் 12000 பாடல்களைக் கொண்டதோடு இடையிடையே உரை நடையும் விரவப்பெற்றது. இப்போதுள்ள பாரத வெண்பா இவர் பாடியதன்று. இவரை, 'இருநூறு பாடல்பன் னீரா யிரமும் செழுந்தமிழ்க்கு—வீரர்தம் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்' என்று தொண்டைமண்டல சதகம் புகழ்கின்றது. இவர் பாடியதாகச் சொல்லப்படும் பாரதம் முழுதும் இப்போது இறந்துவிட்டது. சிற்சில பாடல்கள்மாத்திரம் தொல்காப்பிய உரைகளில் உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டிருத்தலின் இப்போது கிடைக்கின்றன. இப்புலவர்பெருமான் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு இவற்றில் சிவபெருமானையும் நற்றிணையில் திருமாலையும் குறுந்தொகையில் முருகவேளையும் துதித்திருத்தலால் வைதிக மதத்தினராகவும் சமரசக் கொள்கை யுடையவராகவும் இருந்திருத்தல் வேண்டுமென்பது நன்கறியக்கிடக்கின்றது. எட்டுத்தொகை நூல்களுள் பலவற்றிற்குக் கடவுள் வாழ்த்துப்பாடியவர் இவரேயாவர்.



## அதிகாரம் VI.

# பிற்காலத் தமிழ்ப்புலவர்கள்.

பிற்காலத்தில் தமிழகத்தில் அநேக புலவர் சிரோமணிகளிருந்தனர். அவருள் முக்கியமான சிலரைப்பற்றியே சிறிது கூறுவாம்.

கம்பர்:—கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப்பெயர் இவருக்கே பொருந்தும். இவர் பாடிய இராமாயணம் சொற்சுவை பொருட்சுவைகளில் இணையில்லாததொரு நூலாகும். இவர் ஆதித்த சோழன் காலத்தில் சோழமண்டலத்தில் உச்சஜாதியிற் பிறந்தவரெனக் கூறுகின்றனர். இவர் ஒட்டக்கூத்தர் காலத்திலிருந்தனரென்றும், சோழவரசன் அவையிற் புலவர் தலைவராகவிருந்தனர் என்றுங் கூறுவது பொய்ம்மையின் பாற்படும் செய்தியாகும். அக்காலத்தில் பெரும்புகழுடன் வாழ்ந்த வெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளலைத் தாம் பாடியுள்ள இராமாயணத்தில் பத்து இடங்களில் புகழ்ந்திருத்தலால் இவர் அவ்வள்ளலது ஆதரவையே பெரிதும் பெற்றுவாழ்ந்தவர் என்பது நன்கு புலப்படுகிறது. இவர் தம் இராமாயணத்தில் திருமாலுக்குப் பரத்துவங்கூறியிருத்தலானும், சடகோபர்மீது அந்தாதியொன்று பாடியிருத்தலானும், திருவரங்கநாச்சியார்

சந்நிதியில் இராமாயணத்தை அரங்கேற்றியபோது வைணவ ஆசாரியர்கள் இவருக்குக் 'கம்பநாட்டாழ்வார்' என்ற பட்டங்கொடுத்துப் பெருமைப்படுத்தியிருத்தலாலும், இவர் பரமவைணவராகவே வாழ்ந்து வந்தவர் என்பது தெளிவாக விளங்குகிறது. தில்லையம்பதியில் பாம்புகடித்து இறந்துபோன ஒருபிள்ளையை அந்தணர் மூவாயிரவர் முன்னிலையில் இராமாயணத்திலுள்ள நாகபாசப் படலத்தைப் படித்து உயிர் பெற்றெழச் செய்தனர் என்றும் ஒருகதை வழங்குகிறது. இவர்மீது சோழன் அம்பு எய்ததாகவும் இவர்,

'வில்லம்பு சொல்லம்பு மேதினியில் ரண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்—வில்லம்பு
பட்டதடா வென்மார்பிற் பார்வேந்தா நின்குலத்தைச்
சுட்டதடா வென்வாயிற் சொல்.'

என்று பாடியதாகவும் சொல்லப்படும் செய்தி சிறிதும் ஆதாரமில்லாததொன்றேயாம்.

ஐயங்கொண்டார் :—இவர் சோழவளநாட்டில் திருவாரூருக்கு அண்மையிலுள்ள தீபங்குடியில் பிறந்தவர். ஜைனசமயத்தைச் சார்ந்த ஒரு புலவராயிருந்து பின்னர்ச் சைவராயினர். இவர் தமிழிலுள்ள தொண்ணூற்றுஆறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய பரணியை இன்சுவை பொருந்தப் பாடுவதில் வல்லவர். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் என்பவர், இவரைக் கவிச்சக்கரவர்த்தி என்று அவ்வுரையில் புகழ்ந்து கூறியுள்ளார். இவர் கி. பி. 1070



முதல் 1118 வரை அரசுபுரிந்த முதற் குலோத்துங்க சோழனது அவைக்களப் புலவராக விளங்கி வருநாளில், அவ்வேந்தன் வடகலிங்கத்தைத் தன்படைத் தலைவனாகிய கருணாகரத் தொண்டைமானைக்கொண்டு வென்றனன். அவ்வெற்றியைப் பாராட்டியே நம் புலவர்பெருமான் கலிங்கத்துப்பரணி என்ற நூலைப் பாடியுள்ளார். அந்நூலை இப்புலவர் அரங்கேற்றியபோது அரசன் தாழிசை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பொற்றேங்காய் அளித்துத் தன் அன்பை வெளிப்படுத்தியதாக ஒரு கதை சொல்லப்படுகிறது.

புகழேந்திப்புலவர் :—இவர் தமிழிலுள்ள நால்வகைப்பாக்களுள் முதற் பாவாயுள்ள வெண்பா இயற்றுவதில் வல்லவர். இவர் நளனது சரித்திரத்தை வெண்பாவில் பாடியுள்ளார். அதற்கு நளவெண்பா என்று பெயர். இவர் அந்நூலையியற்றியபோது மள்ளுவநாட்டிலிருந்த சந்திரன்சுவர்க்கி என்ற சிற்றரசன் ஆதரித்துவந்தான் என்பது அந்நூலில் சந்திரன்சுவர்க்கியைச் சிலவிடங்களில் இவர் புகழ்ந்திருத்தலால் தெரிகிறது. இவரும் ஒட்டக்கூத்தரும் தம்முள் பகைமையுற்று வாதம்புரிந்தனர் என்பதும், அதுபற்றி நிகழ்ந்த பிற செய்திகளும் ஐயமுறத்தக்கனவாயிருத்தலின் அவற்றைத் தக்க ஆதாரங்கொண்டு ஆராய்ந்து துணியும்வரை ஒன்றும் கூறுதற்கு இயலவில்லை. இவர் திருமாலிடத்துப் பேரன்புபூண்டு ஒழுகிவந்த புலவர் ஆவர்.

ஒட்டக்கூத்தர் :—இவர் தஞ்சை ஜில்லாவில் திருத்துருப்பூண்டி தாலுகாவிலுள்ள மலரிக்குடியில் செங்குந்த மரபிற் பிறந்தவர். புதுவைக்காங்கேயன் என்ற ஒரு பிரபுவால் இளமையில் ஆதரிக்கப்பட்டுக் கல்வி கற்பிக்கப்பட்டார். இவர் பழைய நூல்களை நன்குகற்றுப் புலவராயிருந்தபோது வறுமையால் இடுக்கணுற்று அக்காலத்தில் சோழ சக்கரவர்த்தியாயிருந்த விக்கிரமன் அவைக்களஞ்சென்று அவனால் பெரிதும் ஆதரிக்கப்பெற்றுத் தம் வறுமைத்துன்பத்தினின்றும் நீங்கினர். பின்னர் அவ்வேந்தனது அவைக்களப்புலவராயினர். அப்போது அவன்மீது ஓர் உலாவும் பாடியுள்ளார். அந்நாளில் அரசன் இவருக்கு இறையிலியாக ஓர் ஊர் அளித்து அவ்வூரைப் புலவர் பெயரால் கூத்தனூர் என்று வழங்கினன். அஃது இப்போது தஞ்சை ஜில்லாவில் பூந்தோட்டம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கே அரைமைலில் அரிசிலாற்றின் தென்கரையிலுள்ளது. அங்கு ஒட்டக்கூத்தரால் அமைக்கப்பட்ட கலைமகள் கோயில் ஒன்று இன்றும் உளது. இப்புலவர் விக்கிரமசோழன் மகன் இரண்டாங்குலோத்துங்க சோழன் காலத்தும் அவன் மகன் இரண்டாம் இராஜராஜசோழன் காலத்தும் உயிர்வாழ்ந்திருந்தனர் என்பது அவ்விருவர் மீதும் இவர் உலாக்கள்பாடியிருத்தலால் புலப்படுகிறது. ஆகவே இவர் நீண்டகாலம் உயிர் வாழ்ந்தவர் என்பது இனிது விளங்குகின்றது. இவர்பாடிய நூற்கள் மூவருலா, தக்கயாகப்பரணி முதலியனவாம்.



வில்லிபுத்தூராழ்வார் :—இவர் நடுநாட்டிலுள்ள சனியூரில் அந்தணர்மரபில் வீரராகவாசாரியர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்குபயின்று விளங்கியவர். வடமொழியிலும் மிக்க பாண்டித்தியமுள்ளவர். இவரது பெருமையையுணர்ந்த கொங்கர்கோமானாகிய வரபதியாட்கொண்டான்என்னும் வேந்தன் இவரைத் தன் அவைக்களத்திற்கு அழைத்து வேண்டியன அளித்துப் பாராட்டினன். அக்காலத்தில் இவர் கண்ணபிரானது சரிதம் இடையிடையே வழங்குஞ் சிறப்பையுடையதாயிருத்தல்பற்றி இதிகாசங்களில் ஒன்றாகிய மஹா பாரதத்தைத் தமிழில் பாடத்தொடங்கி அதில் முதல் 10 பருவங்களைப் பாடி முடித்தனர். எஞ்சிய எட்டுப் பருவங்களும் இவரால் பாடப்படவில்லை என்று ஒருசாராரும், பாடப்பட்டு இறந்துபோயின என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். இவரது பாரதம் தமிழ்நாட்டிலுள்ள எல்லாமக்களாலும் இன்றுகாறும் போற்றிப் படிக்கப்பட்டு வருதல் ஒன்றே அதன் பெருமையை நன்கு விளக்காநிற்கும். இப்பெரியார் வாதில் தோல்வியுற்ற புலவர்களது காதை அறுக்கும் வழக்கமுடையார் என்ற கதையும் இவர் தாயத்தினர் தம் பாகத்தை வேண்டி இவரோடு சண்டையிட்டபோது அவ்வழக்கைத் தீர்க்கும்பொருட்டு அரசன் இவரைப் பாரதம் பாடச்சொன்னான் என்ற கதையும் வெறுங்கற்பனையன்றி வேறொன்றுமில்லை.

அதிவீரராமபாண்டியர் :—இவர் தென்காசியிலிருந்து ஆட்சிபுரிந்த பிற்காலப் பாண்டியருள் ஒருவர். இவர் சிறந்த தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். இவர் தமிழில் பாடியுள்ள நூல்கள் கூர்மபுராணம், இலிங்கபுராணம், நைடதம், வாயுசங்கிதை முதலாயின. இவற்றுள் நைடதம் என்பது தமிழைக் கற்க விரும்புவோர் யாவராயினும் விரும்பிப் படிக்கப்பட்டு வருதலை அறியாதார் யாவர்? நம்நாட்டு இளைஞர்கள் இன்றும் படித்து வரும் வெற்றிவேற்கை என்ற நூலை எழுதியவரும் இவ்வரசர் பெருந்தகையே யாவர். இவரது சகோதரராகிய வரதுங்கராமபாண்டியரும் சிறந்த புலவரே என்பது அவர் எழுதியுள்ள சில நூல்களால் புலப்படுகிறது. இவர் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசர் ஏறு என்று, தென்காசிக் கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவர் காலத்து வாழ்ந்தவரே ஆசுகவி வீரகவிராயர் என்பார். இவர் தமிழில் பாடியுள்ளது அரிச்சந்திரபுராணம் என்றநூல். இவர் சோகரசத்தைப் புனைந்து பாடுவதில் சிறந்தவர் என்பது கற்றோர் உணர்ந்த விஷயமேயாம்.

பிள்ளைப்பெருமாளையங்கார் :—அழகிய மணவாளதாஸரென்னு மறுபெயருடைய பிள்ளைப்பெருமாளையங்கார் சோணாட்டில் சீர்காழியையடுத்த திருமங்கையென்னும் ஊரில் வைஷ்ணவப் பிராமண குலத்தில் பிறந்தனர். அவர் வடமொழி தென்மொழி யிரண்டிலும் மிகவல்லவராய் அந்நாட்டரசனிடம் உத்தியோகத்தி



லமர்ந்திருந்தார். அவரது கல்வி மேம்பாட்டையும் தெய்வபக்தியையுங் கண்ட அரசன் அவரைத் தன்னிடம் சேவையில் வைத்திருக்கப் பயந்து, அவரது விருப்பப்படி அவருக்கு ஸ்ரீரங்கத்தில் வாஸஞ் செய்வதற்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்து அனுப்பினான். தினமும் அவர் ஸ்ரீரங்கநாதரைத் தரிசித்து வந்தார். திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக் கலம்பகம், ஸ்ரீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி என்ற எட்டு நூல்களையும் இயற்றியருளினார். இவை யெட்டு நூல்களும் அஷ்டப்பிரபந்தம் எனப் பெயர் பெறும். அவர் திருநறையூர்நம்பி மேகவிடுதூது, என்ற நூலும் இன்னம் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். அவர் ஸ்ரீமந் நாராயணனிடமும், அவருடைய பக்தர்களான ஆழ்வார்கள் பக்கலிலும் மிகுந்த பக்தியுடையராய், ஆழ்வார்கள்பாடிய பிரபந்தத்தில் மிக ஈடுபட்டுச் சகல நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றிருந்தார். அவரது கவிசாதுர்யத்தையும், பாடல்களின் சொற்சுவை பொருட்சுவைகளையும், தொடைநடையழகுகளையுங் கண்டு களியாதவர் யாருமில்லை. அவரது கவியின் பெருமைபற்றி அவருக்கு, 'திவ்யகவி' என்ற பட்டம் கிடைத்தது. வெண்பாவில் வல்ல புகழேந்திப்புலவரும், விருத்தப்பாடவல்ல கம்பரும், அந்தாதியில்வல்ல ஒட்டக்கூத்தரும், கலம்பகத்தில் வல்ல இரட்டையரும், சந்தப்பாடவல்ல படிக்காசுத்தம்பிரானும்

முதலிய மஹாகவிகள் கூடிப்பாடியதை யொக்கும் இவரது கவிகள்.

இவர் பெருமையை அரசன் அறிந்ததற்கும், அவர் திருவேங்கடத்தந்தாதி பாடியதற்கும் பல காரணங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. அவர் வைஷ்ணவ ஸமயத்தை நன்கு பரவச்செய்த ஸமயாசாரியரான ஸ்ரீ ராமாநுஜருடைய அந்தரங்க சிஷ்யரான கூரத்தாழ்வானுக்குக் குமாரரான பராசரபட்டரது சீடர். அவர் இராமாநுஜநூற்றந்தாதிபாடிய திருவரங்கத்தமுதனார் என்பவரது குமாரர் என்று பலரும், பேரனென்று சிலரும் கூறுவர். அவர் ஸ்ரீரங்கநாயகியாரூசல் பாடிய கோனேரி அப்பனையங்காரது பாட்டனார். அவரது காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 770 வருடங்கட்கு முன்னர் என்று ஊகிக்கப்படுகிறது.

அவர் ஒரு ஸமயம் தம் சீடர்களிடம், தமக்கு அந்திமதசை பசுவினால் நேரும் என்று கூறினர். அவ்வாறே அரங்கத்தில் ஸ்ரீ வைகுண்டநாதர் சந்நிதியில் ஒருநாள் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருக்கையில் ஓர் கொண்டிப்பசு அவர்மேல் வந்துவிழத் தாமுங் கீழே விழுந்த அவர்,

“நாவ நாவமெனச் சொல்லுஞ்சொற் போச்சே
அவனில் நெடுமூச்சு மாச்சே—முனிக்
காங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சாச்சே
இரங்காய் அரங்கா இனி,”

என்று கூறிப் பரமபதமடைந்தனர்.



இப்பெரியாரைப் போலவே செந்தமிழ்ச் சுவையொழுகும் பல பிரபந்தங்களைப்பாடியுள்ள பெரியோர்கள் சைவசமயத்தில் பிற்காலத்தும் இருந்திருக்கின்றனர். அவர்கள் குமரகுருபரமுனிவரும் சிவப்பிரகாசசுவாமிகளும் சிவஞானமுனிவருமேயாவர். இவர்கள் தமிழில் எழுதியுள்ள நூற்கள் சற்றேறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்டிருக்கலாம். இம்மூவருள் குமரகுருபரர் காசியில் அக்காலத்திருந்த மகமதிய அரசனாலும் போற்றப்பட்டு காசிமடத்தைத் தாபித்தவராவர். தற்காலமுள்ள திருப்பனந்தாள் ஆதீனமென்பது இம்மடத்தைச் சார்ந்ததேயாகும். சிவஞானமுனிவர் சிறந்த உரைநடை எழுதுவதிலும் வல்லவர். அவர் சிவஞானபோதம் என்ற நூலுக்கு எழுதிய பேருரை சிவஞானபோத மகாபாஷ்யம் என்று வழங்கப்பட்டு இன்னும் சைவர்களால் பூசிக்கப்பட்டு வருகிறது. சிவப்பிரகாசசுவாமிகள் இத்தாலியா தேசத்தினராகிய பெஸ்கி என்ற வீரமாமுனிவரோடு வாதஞ்செய்து ‘ஏசுமதநிராகரணம்’ என்ற கிறிஸ்துமதக் கண்டன நூலும் அக்காலத்தில் எழுதியிருக்கின்றனர். ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் புராணங்களும் பிரபந்தங்களும் பாடுவதில் சிறந்தவராய் விளங்கிய புலவர் சிகாமணி மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்பவரை நேரில் அறிந்தவர்கள் இப்போதுமிருக்கிறார்கள்.

## அதிகாரம் VII.

# சிவனடியார்கள்.

தென்னாட்டில் ஆதிகாலத்தரசர்களில் அநேகர் பௌத்தர்களாகவும் ஜயினர்களாகவும் இருந்தனர் என்று விளங்குகிறது. பல்லவராதிபத்யம் பரவிய பின்னர் நாடெங்கும் வைதிகமத வழக்கம் பரவிச் சைவவைணவ மதங்கள் தலையெடுத்தன. அக்காலத்தில் தோன்றியவர்தாம் சிவனடியார்களும் வைணவ ஆழ்வார்களும். இருமதமும் வேத சம்பந்தமானவையாதலால் வேந்தர்களும் மக்களும் அவைகளைத் தொடர இடமுண்டாயிற்று. இவ்விருவகை அடியார்களின் பரிசீலனையில் ஈடுபட்ட தமிழ் மக்கள் இதர மதக்கொள்கையை விடுத்து ஆரியமதத்தைத் தழுவினரென்பது திண்ணம். அரசன் வழியே குடிகள் புகுவது இயற்கையாதலாற்றான் மக்களும் சைவவைணவராய்ப் பிரிந்தனரென்று கொள்ளவேண்டும். தமிழருள் பெரும்பான்மையோர் சைவராதலாற்றான் தமிழகத்தில் சைவமே தழைத்தோங்கியது. ஆயினும், மற்ற மதத்தினருக்கு அவர்கள் இடையூறு செய்ததாகப் புலப்படவில்லை. ஏககாலத்திலேயே இவ்விரண்டு மதங்களும் தமிழகத்தில் வழங்கியவென்று ஆராய்ச்



சியில் தெரியவருகிறது. ஆதிபல்லவவரசர் வைணவர்களென வெளியாகிறது. தமிழகத்தில் அவர்கள் ஆட்சி 400 ஆண்டுகள் நடைபெற்றதுபற்றி இந்நாட்டில் வைணவ மதத்திற்கும் ஆதரவு உண்டாயிற்று. தமிழ் நூற்களில் பண்டைக்கால முதல் திருமாலின் கோயில் திருப்பதி, ஸ்ரீரங்கம், திருமாலிருஞ்சோலை முதலிய தலங்களிலிருந்தனவென்பது கூறப்படுமாதலால் தொன்றுதொட்டு வைணவமதமும் இந்நாட்டில் விளங்கிற்று என்று நினைக்கவிடமுண்டு. வேத மதத்திற்கு வேறுபாடுடைய பௌத்த ஜயினமதங்களை நாளடைவில் இந்நாட்டிலிருந்து துரத்தியது இந்தச் சைவவைணவத்தொண்டர்குழாமே.

இவ்வாறு சைவமதத்தை எங்கும் பரவச்செய்த சைவசமயகுரவர் நால்வர் இருந்தனர். அவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் எனப்படுவர். அவர்கள் அருளிய பாடல்களையும் பிறசைவப் பிரபந்தங்களையும் நம்பியாண்டார் நம்பி என்ற பெரியார் திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். அப்பாடல்கள் எல்லாம் ஒன்று முதல் எட்டு முடியவுள்ள திருமுறைகளில் அடங்கியுள்ளன. பின்னர் எஞ்சியுள்ள சிவனடியார்கள் பாடியுள்ள பாடல்களும் நூல்களும் ஒன்பது முதல் பன்னிரண்டு முடியவுள்ள திருமுறைகளில் அடங்கியுள்ளன. ஆகவே சைவத்திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் திருஞானசம்பந்தர்

திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரது பாடல்களும் தேவாரப்பாடல்கள் என்று தற்காலத்தே வழங்கிவருகின்றன. மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் 651 ஆகும். இப்பாடல்கள் அடங்கியுள்ள நூலுக்குத் திருவாசகம் என்று பெயர். இதனோடு ஒருங்கு வைத்துப்பாராட்டப்பெறும் நூலாகிய திருச்சிற்றம்பலக்கோவையாரும் இப்பெரியார் அருளியதேயாகும். சிவனடியார் அறுபத்துமூவரது சரிதங்களும் சேக்கிழாரால் இயற்றப்பெற்ற திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்தில் அடங்கியுள்ளமையின் அந்நூல் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பெற்றுளது.

இனி சமயகுரவர் நால்வர் வரலாற்றையும் கூறுவாம். சைவசமயாசாரியருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம்பாடியுள்ள திருத்தொண்டத்தொகையில் சிவனடியார் திருநாமங்களைக் குறித்துள்ளார். அவர்கள் அறுபத்துமூவர் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றனர். அவர்கள் சரித்திரங்களை இயன்றவரை விளக்கும் நூலே பெரிய புராணம் என்பது. இவ்வறுபத்துமூவருள் சமயாசாரியராயுள்ளவர்கள் மூவர் ஆவர். அவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் என்போர். இவர்களுள் திருஞானசம்பந்தர் தஞ்சை ஜில்லாவிலுள்ள சீர்காழியில் அந்தணர்குலத்திலே உதித்து மூன்றாம் ஆண்டில் உமாதேவியாரால் ஞானப்பாலூட்டப்பெற்றுச் சிவ

V2 11 · 3



N27

பெருமானை இனிய தேவாரப்பாடல்களால் துதித்தனர். பிறகு அத்தலத்திற்கு அண்மையிலுள்ள திருக்கோலக்காவிற்குச் சென்று அங்கு இறைவனால் அளிக்கப்பெற்ற பொற்றாளங்களைப் பெற்று மகிழ்ந்தார். பின்னர் அவர் தம் தந்தையார் தூக்கிச்செல்லப் பலதலங்களுக்குச்சென்று தரிசித்துவருங்கால் திருவரத்துறையிலுள்ள சிவபெருமான் அவருக்கு ஏறிச்செல்லப் பொற்சிவிகை கொடுத்தருளினார். சம்பந்தர் அச்சிவிகையிலேறிப் பல ஊர்களுக்குஞ்சென்று கடவுளை வணங்கி வருநாளில் திருவீழிமிழலையிலும் திருவாவடுதுறையிலும் முறையே படிக்காசும் பொற்கிழியும் சிவபெருமானிடத்துப் பெற்றார். பின்னர் அவர் மதுரையம்பதிக்குச்சென்று நெடுமாறன் என்ற பாண்டியனது சுரநோய் நீக்கியும் சமணர்களை வாதில்வென்றும் வைகையில் ஏடு எதிரேறவிட்டும் பல அற்புதங்களைப் புரிந்தருளினார். பிறகு திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூருக்குச் சென்று எலும்பைப் பெண்ணாக்கியருள் புரிந்து சோழநாட்டிற்குத் திரும்பிச் சீர்காழிக்கடுத்துள்ள நல்லூரில் தாம் மணம்புரிந்துகொண்டு அந்நாளிலே அங்கு இறைவர் அருளால் தோன்றிய ஒரு பெருஞ்சோதியில் கலந்தருளினார். இப்பெரியார் அருளிய தேவாரப்பாடல்கள் 16,000 என்பர். இப்போதுள்ளவை 4000 ஆகும். இவை சைவத்திருமுறை பன்னிரண்டனுள் முதல் மூன்று திருமுறைகளுள் அடங்கியுள்ளன.

59435

திருநாவுக்கரசர் :—தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள திருவாமூரில் வேளாளகுலத்திற்பிறந்து இளமையில் அரியகலைகள் அனைத்தையுங்கற்று அறிஞராய் விளங்கினார். அவர் செல்வமிருந்த பெருங்குடியிற் பிறந்தவராதலின் செல்வத்தின் பயன் ஈதல் என்பதை நன்குணர்ந்து பல தர்மங்களைச் செய்துவந்தார். பின்னர், சமணமதமே சிறந்ததெனக்கருதி அம்மதத்தினராகிப் பிறகு சமணசமய ஆசாரியருமாயினர். அவருடைய தமக்கையாராகிய திலகவதியார் திருவதிகை வீரட்டத்துள்ள சிவபெருமான்பால் தம் தம்பியாரைச் சைவசமயத்திற்குக்கொணருமாறு வேண்டிக்கொள்ள, அப்பெருமானும் திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் வரச்செய்து அவரைச் சைவசமயத்திற்குத் திரும்பச் செய்தார். திருவதிகையில் அவர் சூலை நீங்கியவுடன் இறைவன் அருளால் அன்புததும்பும் இனிய தேவாரப்பாடல்கள்பாடும் பேறும் பெற்றார். அவர் சைவராயதைக்கேட்ட மகேந்திரவர்மன் என்னும் பல்லவவேந்தன் சமணர்களது தூண்டுதலால் அவரை நீற்றறையிலிட்டும், விடங்கலந்த உணவை உண்பித்தும், யானைக்காலால் மிதிப்பிக்கமுயன்றும், கல்லோடு கட்டிக் கடலில்போட்டும் இடுக்கண் விளைத்தான். சிவபெருமான் திருவருட்பெருக்கினால் அப்பெரியார் இத்துன்பங்களினின்றும் நீங்கினார். பிறகு அவர் தலங்கள்தோறுஞ் சென்று சிவபெருமானை வணங்கித் தேவாரப்பதிகங்கள் பாடிவந்தார்; அந்நாளில் அவர் இறைவனால் திருவீழிமிழலையில் படிக்காசு கொடுக்



கப்பெற்றார்; திருமறைக்காட்டில் வேதங்களால் மூடப்பெற்றகதவினைத் திறப்பித்தருளினர்; பாம்பு கடித்திறந்த அப்பூதியடிகளது புதல்வனைப் பதிகம் பாடி உயிர்பெற்றெழச் செய்தார். இப்பெரியார் இத்தகைய அற்புதங்கள் பல செய்து இறுதியில் சித்திரைத்திங்கள் சதயநாளில் திருப்புகலூரில் சிவபெருமான் திருவடி நிழலில் கலந்தருளினார். இவர்பாடிய பாடல்கள் 49,000. இப்போதுள்ளவை 3000 பாடல்களாகும். இவை, 4, 5, 6 ஆந் திருமுறைகளில் அடங்கியுள்ளன.

சுந்தரமூர்த்திகள் :—நடுநாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ அந்தணர்குலத்தில் அவதரித்து அந்நாட்டரசராகிய நரசிங்க முனையரால் வளர்க்கப்பட்டு உரியபருவத்தில் நடைபெற்ற திருமணத்தில் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டுத் தலங்கள்தோறும் சென்று வணங்கித் தேவாரப்பதிகங்கள் பாடிவந்தனர். அந்நாளில் சிவபெருமான் அவருக்குத் திருவாரூரில் பரவையார் என்னும் பெண்மணியை மணஞ்செய்வித்தனர். பிறகு, அவர் பரவையாரோடு இல்லறம் நடத்திவரும் நாட்களில் குண்டையூரிலிருந்து நெற்பொதிகளைப் பூதங்களைக்கொண்டு கொணர்வித்தும், திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாநதியிலிட்ட பொற்குவியலைத் திருவாரூரில் கமலாலயத்தில் பெற்றும், திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலையுண்ட பாலனை அழைத்தும் பல அற்புதங்களைப் புரிந்தருளி

னார். அவர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்துகொண்டு சிலகாலம் அங்கு வசித்த காரணம் பற்றிக் கோபங்கொண்ட தம் முதல்மனைவியாராகிய பரவையாரிடம் சிவபெருமானையே தூதராக அனுப்பினாரெனின் அவரது பெருமை நாம் கூறுந்தரத்ததோ? அவர் தமது நண்பராகிய சேரமான்பெருமாள் நாயனாரோடு இறுதியில் திருக்கைலைக்குச் சென்றருளினார். இவர் தம்பிரான்றோழர் என்றழைக்கப்படுதலால் சிவபெருமான் அவரைத் தம் தோழராகக்கொண்ட செய்தி இனிது விளங்குகிறது. அவர் பாடிய தேவாரப் பாடல்கள்-36,000 என்ப. தற்காலத்துள்ளவை 1000 பாடல்களாகும்.

இனி அறுபத்துமூவருள் ஒருவராகிய காரைக்காலம்மையார் சிவபெருமான் மீது திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய இரண்டு நூல்கள் பாடியுள்ளார். சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத்தந்தாதியும் திருவாரூர்நான்மணிமாலையும் திருக்கைலாய ஞானவுலாவும் பாடியருளிய அரசர்பெருமான் ஆவர். இவரும் அறுபத்துமூவருள் ஒருவர். இவர் சுந்தரமூர்த்திகளோடு கைலாயம் சென்றருளிய செய்தி முன்னரே கூறப்பட்டது. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தலங்கள்தோறுஞ் சென்று க்ஷேத்திர வெண்பாவைப் பாடியவர். இவர் பல்லவகுல மன்னர். இவரும் அறுபத்துமூவருள் ஒருவர். காரைக்கால் அம்மையார் சேரமான்பெருமாள்



நாயனார் ஐயடிகள் காடவர்கோன்நாயனார் ஆகிய மூவரும் சிவபெருமான் மீது பாடியருளிய பிரபந்தங்கள் எல்லாம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்றாகிய பதினோராம் திருமுறையில் அடங்கியுள்ளன.

இனி, சைவ சமயாசாரியருள் நான்காமவராகக் கருதப்படுகிறவர் மாணிக்கவாசகசுவாமிகள் ஆவர். அவர் பாண்டிநாட்டில் திருவாதவூரிலே அந்தணர் குலத்தில் பிறந்து எல்லாக் கலைகளையும் கற்று அரிமர்த்தனபாண்டியனுக்கு முதல் அமைச்சராகவமர்ந்து, 'தென்னவன்பிரமராயன்' என்ற பட்டமும் பெற்று இனிது வாழ்ந்து வந்தார். அந்நாளில் பாண்டிவேந்தனது பொருளை எடுத்துக்கொண்டு கீழ்க்கடற்கரைக்குப் பரிமாக்கள் வாங்கிவரும் நிமித்தம் அவர் சென்றபோது சிவபெருமான் அவரது பரிபக்குவ நிலையையுணர்ந்து ஆளுடையார் கோயில் என வழங்கும் திருப்பெருந்துறையில் அவரைத் தமக்கு அடியவராக ஆட்கொண்டு அப்பொருள் அனைத்தையும் ஆலயத் திருப்பணிக்கும் தம் அடியார்க்கும் செலவிடச் செய்தனர். இச்செய்தியையுணர்ந்த பாண்டியன் குதிரை வாங்கி வாராமைக்காகத் தன் அமைச்சர்பால் பெருஞ் சீற்றங்கொண்டபோது சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கி அவற்றைச் செலுத்திச்சென்று பாண்டியனிடம் அவன் மகிழுமாறு விட்டனர். பின்னர் இரவில் பரிகள் நரிகளாகவே பாண்டியன் மீண்டும் அமைச்சர்

மீது கோபங்கொண்டு அவரைத் துன்புறுத்துவாராயினான். சிவபெருமான் வையையைப் பெருகிவரச் செய்து நகரில் யாண்டும் நீர் ஓடச்செய்தனர். அஞ்ஞான்று, அரசன் ஆணையின்படி நகரத்தார் தத்தம் பகுதியை அடைத்து வந்தபோது ஆள் இல்லாமல் வருந்திய வந்தியின்பொருட்டுச் சிவபெருமான் தாமே அவள் ஆளாக வையையை அடைக்கவந்து பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியன் கைப்பிரம்பினால் அடியும்பட்டனர். பின்னர், கடவுள் இத்திருவிளையாடல்களை மாணிக்கவாசகர்பொருட்டுத் தாம் செய்ததாக ஆகாயவாணியாற்கூறியருளவே, பாண்டியன் மாணிக்கவாசகரை வணங்கித் தன் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். அவர் அதை மறுத்துவிட்டுத் தில்லைமுதலான தலங்கட்குச்சென்று பல பாடல்கள்பாடிக் கடவுளை வணங்கினார். அவர் பாடல்கள் அடங்கியநூல் திருவாசகம் எனப்படும். திருச்சிற்றம்பலக் கோவையாரும் அவர்பாடியநூலேயாகும். இவை எட்டாம் திருமுறையாகவுள்ளன. நம் மாணிக்கவாசகப் பெருமான் ஊமைப்பெண்ணைப் பேசவைத்தல், பௌத்தரை வெல்லல் முதலான அற்புதங்கள் செய்து தில்லையில் நடராஜப்பெருமான் நடனம்புரியும் பொன்னம்பலத்துள் புகுந்து அதில் மறைந்தருளினார்.



## அதிகாரம் VIII.

# ஆழ்வார்கள்.

தமிழ் நாட்டில் வைணவத்தைப் பரவச்செய்தவர் ஆழ்வார்கள் எனப்படுவர். இவர்கள் பன்னிருவர். இவர்களுள், "வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்" என்பார் பெரியார். இவர் செம்பில்நதிக்கரையில் திருநகரியில் வேளாள குலத்திலவதரித்துக் குழவிப் பருவத்திலேயே பல அற்புதச் செய்கைகளைச் செய்து அவ்வூர் ஆதிப்பிரான் கோயிற்பாலுள்ள ஒரு புளிய மரத்தடியில் திருமாலை அனவரதம் தியானம் செய்து ஞானயோகநிரதராய் வீற்றிருந்தார். அக்காலையில் மதுரகவியாழ்வார் என்ற ஓர் அந்தணர் அவரிடம் சென்று அவரியற்றிய வேதசாரமான ஆயிரம் பாக்களையடைந்து ஆழ்வார் திருவடியில் ஈடுபட்டவராய் "மாறன் திருவடியல்லால் மற்றொன்றும் காணேன்" என்ற அற்புத சிஷ்யபாவத்தை யடைந்தனர். இவருக்கு முன்னும் பின்னுமாக அவதரித்த ஆழ்வார்களுடைய நாலாயிரம் செந்தமிழ்ப் பாசுரங்களையும் ஒன்று சேர்த்து அதற்குத் திவ்யப் பிரபந்தமென்ற திருநாமம் சாத்தி வெளியிட்டவர் சோழநாட்டு வீரநாராயணபுரத்திலிருந்த வைணவ ஆசிரியர் நாதமுனிகள் என்பாராவர்.

பாண்டிய மண்டலத்தில் மாறன் சடையன் என்ற பாண்டியன் காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற திவ்ய தேசத்தில் அவதரித்தவர் பெரியாழ்வார். இவர் ஒரு விப்ரகுலதிலகர். விஷ்ணுசித்தர் என்ற திருநாமமடைந்தவர். இவர் அவ்வூரிலுள்ள வடபெருங்கோயில் ஜலசயனப் பெருமாளுக்குத் திருமாலைக் கைங்கர்யம் செய்து அப்பெருமானே தஞ்சமெனக் கருதியிருந்தார். இவர் வடநாட்டில் யமுனைக்கரையில் ஆயர்பாடியில் நந்தகோபன் மகனாகித் திருவிளையாட்டைச்செய்த கண்ணபிரானுடைய பாதகமலங்களில் ஈடுபட்டவராய் ஆயிரம்பாக்களுக்கு மேலடங்கிய முதலாயிரத்தைப்பாடியுள்ளார். மதுரையில் சமணர் நாட்டிய வீரக்கொடியின் கிழிபறித்துப் பாண்டியனை வைஷ்ணவனாக்கி அவனவையில் சிறப்புடன் அமர்ந்தவர் இவரே. ஒரு நாள் இவர் கோயில்நந்தவனத்தில் திருமாலை கட்டுவதற்காக மலர்கொய்யப்போன இடத்தில் நிலமகள் அவதாரமாகிய கோதைப் பிராட்டியாரைக் கண்டு அவளை எடுத்து வீடுசென்று தம் மகளாக வளர்த்து வந்தார். பிரதிதினமும் ஆழ்வார் திருமாலுக்கென்று கட்டிய மாலைகளை அந்த ஆண்டாள் ஒருவருமறியாமல் முந்தி தானேதரித்துக் கிணற்றுநீரில் அழகுபார்த்துப் பின்பு அவைகளைக்கழற்றிக் குடலையிலிட்டுக் கோயிலுக்கு அனுப்புவாள். ஒருநாள் ஆழ்வார் அவளணியாதமாலையை வடபெருங் கோயிலானுக்குச் சமர்ப்பிக்க, "கோதைமணமில்லாத மலர்வேண்டேன்" என்று எம்பெருமான் அதையெடுத்தெறிந்ததைக்கண்ட ஆழ்வார்



வியப்படைந்து தம் மகளுக்கு, "சூடிக்கொடுத்தநாச்சியார்" என்ற திருநாமத்தை யளித்தார். மணம்புரிவிக்கும் காலம் வரும்போது ஆழ்வார் மகளையழைத்துக் கேட்க? "மானிடவர்க்கல்லேன்யான்" என்று திருவாய்மலர்ந்தருளிய இத்தெய்வப்பாவையைப் பல திருப்பதிகளிலுறைந்த திருமாலைத் தரிசிக்க அழைத்துச் சென்றார். ஸ்ரீரங்கம் கோயிலினுட் புகுந்த தமது திருமாமகள் திரும்பி வராததுகண்டு ஆழ்வார் ஸ்ரீரங்கநாதரே தம் மகளை அழகிய மணவாளராகிக் கைக்கொண்டார் என்று நினைத்து உளமகிழ்ந்து ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் சென்றார். நாலாயிரத்திலடங்கிய "நாச்சியார் திருமொழி" யென்ற முந்நூறு பாசுரங்களும் ஆண்டாள் அருளிச் செய்தனவே.

பேயார், பூதத்தார், பொய்கையார் என்ற முதலாழ்வார்கள் பாடிய மூன்று திருவந்தாதிகளும் நாலாயிரத்திலுள்ளிருக்கின்றன. தொண்டை நாட்டில் அவதரித்த திருமழிசை என்ற ஓர் அந்தணர் பல சமயங்களில் திரிந்து கடைசியில் திருமாலுக் கடியவராகித் திருச்சந்த விருத்தம் பாடியுள்ளார். விப்ரநாராயணர் என்ற ஒரு சோழிய அந்தணர் பெரியகோயில் மடைப்பள்ளிக் கைங்கரியத்தில் அமர்ந்திருந்த நாளில் ஒரு பரத்தையின் வலையிலகப்பட்டு எம்பெருமான் திருவருளால் நற்கதியடைந்தார். இவர் "திருமாலை" என்ற அரிய பாமாலையை அரங்கமாநகருள்ளானுக்குச் சூட்டி இருக்கிறார். இவரைத் தொண்டரடிப்பொடி

ஆழ்வார் என்பர். திருப்பாணாழ்வார் இழிகுலசம்பந்தமுடையரேனும் திருமாலது திருத்தொண்டருள் சிறந்தவரென்று கூறலாம். பாணன் பாக்கள்பத்துமே பரமபதமளிக்கும் என்பர் பக்தர்கள்.

நாலாயிரத்தில் "பெருமாள் திருமொழி" என்று ஒரு தொகுதியிருப்பதைக் காணலாம். இதைப்பாடியவர் சேரமன்னரான குலசேகரப் பெருமாளாவர். இவர் மன்னராயினும் ராஜகாரியங்களை அமைச்சரிடம் ஒப்பித்து வைணவர் கூட்டத்தில் கலந்து சதா திருமாலைப் போற்றியே காலம் கழித்துவந்தார். அமைச்சர்கள் இவரைப் பக்தி வழியினின்று திருப்புமாறு கோயிற்றிருமாலின் அணிகலனை அப்புறப்படுத்தி வைணவர்கள் கொள்ளையிட்டார்களெனப் பொய்யுரைத்தனர். வைணவரின் மகத்துவத்தை நன்குணர்ந்த ஆழ்வார், "ஒருபோதும் வைணவர் அக்கொடிய காரியம் செய்யார் என்று குடம் பாம்பில் கையையிட்டுச் சபதம் செய்வேன்" என்றார். அமைச்சரும் அப்படியே ஒருகுடத்தில் பாம்பு அடைத்துத் தருவித்து ஆழ்வாரை அதனுள் கையிடச்சொன்னார்கள். கொஞ்சமேனும் அஞ்சாமல் ஆழ்வார் தம் கையையிட்டுத் திருமாலைப்புகழ்ந்தார். பாம்புகளால் துன்பம் ஏற்படாததைக் கண்ட யாவரும் அச்சமும் வியப்புமடைந்தார்கள். ஆழ்வார் இனி இங்கிருப்பது சரியல்லவென்று நினைத்துத் திருப்பதிக்கேகிப் பிறகு ஸ்ரீரங்கம் வந்து அங்கேயே தம் காலத்தைக் கழித்தனர். மேலும், "கோனேரி



37

வாழும் குருகாய்ப்பிறப்பேனே" என்று வருந்தித் திருமாலுக் கடிமை புகுந்த இந்த ஆழ்வார் ஸ்ரீ ராமாவதாரத்தில் மிக ஈடுபட்டவராய்ப் பாடிய பாசுரங்கள் பலவுள.

நாலாயிரத்தின் பெரும்பகுதியாகிய பெரிய திருமொழியைச் செய்தவர் ஆலிநாடர் திருமங்கை மன்னரே. கள்வர் குலத்திலுதித்த கலியன் என்பார் இவரே. இவர் ஒருநாள் ஆடல் மாவேறி அலைந்து வேலும், பிடித்தவாளுமாய் அடவியில் திரிந்து மீண்டு வரும் வழியில் ஒரு வைத்தியர் மகளைக்கண்டு அவள்பால் மையல்கொண்டு அவளைத் தூக்கிச்செல்ல ஓடினார். அப்பொழுது அம்மாதின் தந்தை நாள்தோறும் ஆயிரத்தெட்டு அந்தணருக்கு ஓர் ஆண்டு அன்னமிட்டால் தன் மகளை இவருக்குத் தாரைவார்ப்பதாக ஏற்றுக்கொண்டான். இக்காட்டரசர் தம் பொருளனைத்தையும் செலவிட்டும் விரதம் நிறைவேறவில்லை. 'மானே கண்மடவார் மயக்கிற்பட்டு மாநிலத்தில்' கொலைகளவு முதலிய புன்தொழிலனைத்தையும் செய்து வந்த இவ்வாழ்வார் ஒருநாளிரவில் காட்டுவழியே மணக்கோலத்துடன் போகும் அந்தணமரபினரான ஒரு மணமகனையும் மணமகளையும் பார்த்து அவர்களுடைய ஆடை ஆபரணங்களைக் கொள்ளையடிக்க எத்தனித்தார். திருமகளும் திருமாலுமே இக்கோலங்கொண்டு வந்தனர்போலும். மாயோன் கழல் பட்டவுடன் ஆழ்வாருக்கு ஞானம்பிறந்தது. மாதவ

ளின் திருவருளால் திருமந்திர உபதேசம் பெற்றுத் தெள்ளிய ஞானத்தராய்த் திருமாலுக்கடிமையாயினர். இவர் கொண்டவிரதத்தையும் பூர்த்தி செய்து தாம் காதலித்த குமுதவல்லி என்ற அந்த மடந்தையையும் மணந்துகொண்டார். இவர் சிலகாலம் இல்லறம் நடத்தியபின்னர்த் துறவறம்பூண்டு, திருப்பதிகள்தோறும் சென்று, திருமாலைப்பாடித் திருவரங்கம் வந்துசேர்ந்தார். அங்கே நெடுங்காலம் வசித்து அக்கோயிலில் அநேக திருப்பணிகளைச் செய்துமுடித்துத், தென்னாட்டில் திருக்குறுங்குடியிலமர்ந்தார். அங்கே தம் மைத்துனரால் வெட்டுண்டு பரமபதமடைந்தார். நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் இவர் பாடிய பாசுரங்களே மிகுதியானவை. இவரை எம்பெருமான் தடுத்தாட்கொள்ளுமுன்னர் இவர் செய்துள்ள புலைத்தொழில்களை நினைந்து நினைந்து வருந்திப்பாடிய பாக்களின் சுவை மிக இனியதாம்.

---



## அதிகாரம் IX.

# மதஸ்தாபகர்கள்.

சிவனடியார்களும் வைணவ ஆழ்வார்களும் முறையே சைவவைணவ மதங்களைத் தமிழ் நாட்டிற் பரவச் செய்தவர்களாயினும், பௌத்த சமணமதங்களை வாதத்தில்வென்று வேதமதத்தை இந்நாட்டில் ஸ்தாபித்தவர்கள் மூன்று விப்ர சிகாமணிகளாவர். பல்லவராட்சியின் கடைப்பகுதியில் மலையாளதேசத்திலிருக்கும் காலடியென்ற ஊரில் அவதரித்தவர் சங்கராசாரியர். இவர் இளமைப் பருவத்திலேயே சகல சாஸ்திரங்களையும் வேதங்களையும் கற்றுணர்ந்தவராய் வேதவாக்கியங்களின் உண்மைக் கருத்துக்களை வெளியிடத் தலைப்பட்டார்; ஸ்ரீ வேதவியாஸ பகவானால் அருளிச் செய்யப்பட்ட, "பிரம்மசூத்திரம்" என்ற அரும்பெரு நூலுக்குப் பாஷ்யம் செய்து அத்வைதமென்ற மதத்தை நிலைநாட்டினார். இவர் தர்க்கம் மீமாம்ஸமென்ற சாஸ்திரங்களில் வல்லவராயிருந்தமையின் தம்முடன் வாதிற்குவந்த பௌத்த சமண மதத்தினர்களை எளிதில் வென்றார். இவர் வாலிபத்திலேயே துறவறம் பூண்டு பல தேசங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள இதர மதத்தினரை வாதத்தில் வென்று திக்குவிஜயம் செய்து வந்தார்; ஆரிய நாடுகளில் பரவியிருந்த காபூ

திகம், மீமாம்ஸம், சார்வாக முதலிய மதங்களையும் கண்டித்து வைதிக மதத்தை ஸ்தாபித்தார். இவரால் ஏற்படுத்தப்பட்ட மடங்கள் துவாரகையிலும், சிருங்கேரியிலும் கும்பகோணத்திலும் தற்காலத்தில் இருக்கின்றன.

தமிழகத்தில் 11-ஆம் நூற்றாண்டில் சோழவரசர்களுடைய ஆட்சி எங்கும் பரவியிருந்தது. அக்காலத்தில் தொண்டைமண்டலத்தில் காஞ்சிபுரத்திற்குச் சமீபத்திலுள்ள ஸ்ரீபெரும்பூதூரில் இராமானுஜாசாரியர் என்ற ஓர் அந்தண ஆசிரியர் அவதரித்தார். இவர் தர்க்க சாஸ்திரத்தில் மிகவும் வல்லவர். வேத மந்திரங்களையும் அவைகளின் பொருளையும் நன்றாய்க் கற்றவர். இவர் வாலிபத்தில் யாதவப் பிரகாசரென்ற ஓர் அத்வைத சந்நியாசியிடம் பாடம் கேட்டுவந்தார். அவருரைத்த வேதார்த்தங்கள் இவருடைய மனத்திற்கு ஒவ்வாமையால் அவரைவிட்டு விலகினார். இவர் வடதேசம் சென்று பல வருஷங்கள் காசியில் வாசஞ்செய்து வைதிகமத ஆராய்ச்சி செய்துவந்தார். தென்னாட்டிற்கு வந்தபிறகு பிரம்மசூத்திரத்திற்கு ஒரு புதிய பாஷ்யம் செய்து விசிஷ்டாத்வைதமென்ற மதத்தை ஸ்தாபித்தார். இவரொரு சிறந்த விஷ்ணு பக்தர். வைணவ ஆழ்வார்கள்பாடிய பிரபந்தத்தை ஒப்புக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் வைணவ ஆசிரியராய் விளங்கினார். சோழவரசன் பரம சைவனானதால் அவ்வூரைவிட்டு மைசூர் இராஜ்யத்திற்குச் சென்றார். சமணமதத்தில் ஈடுபட்டிருந்த அத்தேச மன்



னனை வைணவனாக்கித் திருநாராயணபுரமென்ற ஊரில் வெகுகாலம் தங்கியிருந்தார். கடைசியில் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். பௌத்த சமண மதங்களைத் தலையெடுக்கவொட்டாமற் செய்து தென்னாட்டில் வைணவ மதத்தை நாட்டியவர் இவரே. இவருக்கு விசேஷமான ஜீவகாருண்யமுண்டு. மோக்ஷபதவியை யடைவதற்கு எக்குலத்தானுக்கும் உரிமையுண்டு என்று சொல்லித் திருமந்திர ரகசியார்த்தத்தை யாவரும் அறிந்து கொள்ளுமாறு வெளியிட்டார். தென்னாட்டிலுள்ள சகல வைணவரும் இவரை ஒரு தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இவர் தம்முடைய முக்கியமான சீடர்களில் 72 பேர்களை ஆசாரியர்களாக நியமித்து வைணவ மதத்தைப் பரவச்செய்தார்.

இவர்காலத்துக்குப் பலவருஷங்களுக்குப் பின்னர், கன்னட தேசத்தில் உடுப்பிக்ஷேத்திரத்தில் மத்வாசாரியர் என்ற நாமங்கொண்ட ஓர் அந்தணர் தோன்றினார். இவர் சாஸ்திரங்களையும் புராணங்களையும் நன்றாய்க்கற்றவர். ஒரு பெரிய விஷ்ணுபக்தர். இவரும் பிரம்மசூத்திரத்திற்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார். இவர், "த்வைத" மதத்தை ஸ்தாபித்தவர். இவருடைய அற்புதச் செயல்களைக்கண்டு அநேகர் இவருக்குச்சீடர்களானார்கள். பக்தி ஒன்றே மோக்ஷத்திற்கு மார்க்கம் என்று இவர் உபதேசித்தார். இவருடைய மதத்திற்கு மத்வமதமென்று பெயர். கன்னடதேசமுழுவதிலும் மற்ற அநேக தேசங்களிலும் இவருடைய சீடர்கள் வசிக்கிறார்கள்.

இந்த மூன்று ஆசாரியர்களுடைய கொள்கைகள் வடதேசத்திலும் பரவியிருக்கின்றன. இம்மூவரும் வைதிகமதத்தை வெளியிட்டவர்களே. சாஸ்திரக் கொள்கைகளிலும் ஆசாரணைகளிலும் இம்மூவருள் விசேஷ அபிப்பிராயபேதங்களில்லை. வேறுமதங்களை மூவரும் கண்டனம் செய்திருக்கிறார்கள். இவர்களுள் மோக்ஷ நிலைமையைப்பற்றி மாத்திரம் அபிப்பிராய பேதமுண்டு. தற்காலத்தில் இம்மூவருடைய மதங்களே தேசமெங்கும் விசேஷமாய் விளங்கி வருகின்றன.



## அதிகாரம் X.

## காவிரிப்பூம்பட்டினம்.

நம் தமிழகத்தில் சோழமண்டலத்திற்குப் பழைய காலத்தில் தலைநகராகவிருந்தது காவிரிப்பூம்பட்டினம் ஆகும். கடற்கரையிலுள்ள நகரங்கள் பட்டினம் என்று வழங்கப்பெறும். காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் கடற்கரையில் இந்நகரம் இருந்ததனால் இதற்குக் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் உண்டாயிற்று. இதற்குப் புகார், காகந்தி என்ற பெயர்களும் உண்டு. இஃது இப்பொழுது சீர்காழித் தாலுகாவில் இருக்கின்றது.

இந்த நகரம் அந்தக் காலத்தில் மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என்ற இரண்டு பாகங்களையுடையதாயிருந்தது. இவற்றுள் மருவூர்ப்பாக்கம் கடற்கரையோரத்தில் இருந்தது. பட்டினப்பாக்கம் அதற்கு மேற்பக்கத்தில் இருந்தது. இவ்விரண்டிற்கும் நடுவில் நீண்ட நிலப்பரப்பு ஒன்றுண்டு. இங்கே மரங்கள் வரிசைவரிசையாக வைத்து வளர்க்கப்பட்டிருந்தன. இம்மரங்களின் நிழலில் சந்தை கூடுவது வழக்கம். இச்சந்தைக்கு நாளங்காடி என்று பெயர்.

பட்டினப்பாக்கத்தில் அந்தணர்வீதியும், அரசர் வீதியும், வணிகர்வீதியும் அமைந்திருந்தன. இங்கே தான் அரசருடைய அரண்மனை இருந்தது. அதனை மகதம், மராடம், யவனம் முதலான நாடுகளிலிருந்து வந்த சிற்பரும், கொல்லரும், தச்சரும் தமிழ் நாட்டுத் தொழில் வல்லாரோடு கூடிக் கண்டோர் கண்ணைக் கவரும் அழகுடன் அமைத்திருந்தனர். அதனைச் சுற்றிலும் தேர், யானை, குதிரை இவைகளைச் செலுத்தும் பாகர்களும் போர்வீரர்களும் வசிக்கும் இடங்களும் இருந்தன. புலவர் பாணர் முதலானோர் வாழும் இடங்களும் அங்கே இருந்தன. கடவுளை வணங்குவதற்குக் கட்டப்பட்ட கோவில்களும், வழக்குகள் தீர்ப்பதற்கும் நூலாராய்ச்சி செய்வதற்கும் அமைக்கப்பட்ட பொது நிலையங்களும், ஒன்றும் இல்லாதவர்களுக்குச் சோறிடுஞ்சாலைகளும், எந்திரக் குளங்களும் இப்பாக்கத்தில் இருந்தன.

கடற்கரையோரத்திலிருந்த மருவூர்ப்பாக்கத்தில் கப்பல்கள் திசைமயங்கிச் செல்லாமல் துறைமுகத்திற்குவரும்படி கலங்கரைவிளக்கம் கட்டப்பட்டிருந்தது. பம்பாய், சென்னை முதலான துறைமுகப்பட்டினங்களில் கப்பல்களை அழைப்பதற்குக் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டிருப்பதை இப்பொழுதும் நாம் பார்க்கலாம். கப்பலில் கொண்டுவரப்படும் பண்டங்களுக்கு வரி வாங்குவதற்குச் சுங்கச்சாவடிகளும் பண்டங்களைச் சேர்த்து வைப்பதற்குப் பண்டசாலைகளும்



இங்கே இருந்தன. இவற்றிற்குப் பக்கத்தில் சீனம், சாவகம் முதலான வெளிநாட்டு வர்த்தகர்களின் மாளிகைகள் இருந்தன. பல்வகை வாணிகர்களும் தொழில் வல்லாரும் வேறுபாடில்லாமல் கலந்து இங்கு வாழ்ந்து வந்தார்கள். இங்கேயுள்ள கடைகளில் முத்து, பொன், மாணிக்கம், பவளம், சந்தனக்கட்டை, அகிற்கட்டை, பனிநீர், குங்குமம், கர்ப்பூரம், பட்டு, துணி, மிளகு முதலான பொருள்கள் தொகுத்து விற்கப்பட்டன. கடல்வழியாகக் கப்பலில்வந்த யானை குதிரைகளும் இங்கே விற்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் காவிரியாறு சிறு கப்பல்கள் செல்லக்கூடியதாயிருந்தது. அதன் வடகரையிலுள்ள இப்பட்டினத்திற்கு அவ்வாற்றின் வழியாக உள்நாட்டுப் பொருள்கள் கப்பல்களில் கொண்டுவரப்பட்டன. இங்கு ஏற்றுமதி இறக்குமதிகள் ஓயாமல் நடந்துவந்தன. பண்டங்களைக் கொள்ளும் ஓசையும் கொடுக்கும் ஓசையும் இப்பாக்கத்தில் எந்நேரமும் கடலொலியினும் மிகுந்திருந்தன. ஆதலால் இது வாணிகத்தில் சிறந்துள்ள ஒரு நகரமாக முற்காலத்தில் விளங்கியது.

வெள்ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், நெடுகல் நிறைமன்றம், பூதசதுக்கம், பாவைமன்றம் என்ற ஐம் பெருமன்றங்களும் சக்கரவாளக்கோட்டம் என்ற சுடுகாட்டுக்கோட்டமும் இலவந்திகைவனம், உய்யானவனம், சம்பாதிவனம், கவேரவனம், உவவனம் என்ற சோலைகளும் இந்நகரத்தில் முற்காலத்தில் இருந்தன.

இவற்றின் சிறப்பை எல்லாம் சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இருபெருங்காவியங்களிலும் விளக்கமாகக் காணலாம்.

முற்காலத்தில் இவ்வளவு சிறப்புடன் விளங்கிய இப்பட்டினத்தை அமைத்து அரசாண்டவன் கரிகாற் பெருவளத்தான் என்னும் வேந்தர்பெருமானேயாவன். இவன் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் சோழமண்டலத்தை ஆட்சிபுரிந்த சோழமன்னன் என்பர்.

தமிழ் மக்கள் எல்லோரும் புகழ்ந்து கொண்டாடும் பட்டினத்து அடிகள் என்ற பெரியார் வாழ்ந்த நகரம் இதுவேயாகும்.

இந்நகரம் கடலால் அழிக்கப்பெற்று இப்போது தன் சிறப்பெல்லாம் இழந்திருப்பினும் இதன் கண்ணுள்ள பல்லவனீச்சரம் என்ற சிவாலயம் ஒன்று மாத்திரம் இதன் பழைய பெருமைக்கும் சிறப்பிற்கும் அடையாளமாக இன்றும் விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்நகரத்தின் பகுதிகளுள் சில இப்போது சிறு கிராமங்களாக இருக்கின்றன.

பாண்டியர்களது துறைமுகப்பட்டினமாகிய கொற்கையும் சேரர்களது முசிறியும் இக்காவிரிப்பூம்பட்டினத்தைப் போலவே வாணிபத்திற்சிறந்த துறைமுகப் பட்டினங்களாக முற்காலத்தில் விளங்கின.



## அதிகாரம் XI.

# பழைய தமிழரசர்.

வடநாட்டுமன்னன் அசோகன் காலத்திற்கு முன்னிருந்த தமிழரசர்களின் சரித்திரம் நன்கு விளங்காவிடினும் தமிழ் நூலாராய்ச்சியால் சில விஷயங்கள் வெளிப்படும். கடைச் சங்க காலத்தில் சோழமண்டலாதிபதி கரிகாலனென்றும், தென்னாடன் மாறன்நெடுஞ்செழியனென்றும், வஞ்சி நாடன் செங்குட்டுவனென்றும் அறியலாகும். கோவலன் சரிதை நிகழ்ந்த காலமிதுவே. ஆதியில் சோழன் பெருமை ஓங்கி இருந்ததென்று நினைக்க இடமுண்டு. நாட்டில் வியாபாரம் தழைத்தோங்கச் செய்வதற்காக உறையூரைவிட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகச்செய்த கரிகாலன் காலத்திருந்த நாட்டு வளம் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினால் உணரலாகும். பீலிவளையென்ற நாககன்னியை மணந்து அவளுடைய மகனுக்குத் தொண்டைமண்டலத்தைத் தந்தவன் இவனுடைய மகன் கிள்ளிவளவனென்பான். மணிமேகலையில் குறித்திருக்கும் உதயகுமாரன் இவன் மகனே. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்ற சேரமன்னனின் மகன் செங்குட்டுவன். கற்பிற்சிறந்த

கண்ணகிதேவிக்கு விக்கிரகம்செய்ய இமயமலைச்சாரலிலிருந்து கல் கொண்டுவந்து அதைக் கங்கையில்நீராட்டி வஞ்சியிற் கோயில்கட்டி அச்சிலையை நாட்டிப் பத்தினிக்கடவுளை முதலில் தொழுதவனிவனே. இவன் கங்கைக்கரை வரையிலுமுள்ள நாடுகளை ஜயித்துத் தன்குடைக்கீழாக்கித் தமிழரசரிற் சிறந்தவனாகி ஆட்சி புரிந்தனன். இவனுடைய அம்மான் மகனான சோழவரசன் பெருநற்கிள்ளியென்பான். இவனரசுரிமை பெறாதபடி போருக்குக் கிளம்பின சோழராஜகுமாரர் ஒன்பதின்மரை உறையூருக்கடுத்த நேரிவாயென்ற ஊரில் நடந்த பெரும்போரில் செங்குட்டுவன் கொன்று தன் கிளைஞனுக்குப் பட்டம்கட்டினான். இதனால் சோழநாடும் சேரமன்னன் ஆட்சிக்குள்ளடங்கிற்றென்றே மதிக்கலாம்.

கோவலனைக் கொடியவதைக்குள்ளாக்கின பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்து பத்தினி சாபத்தால் மதுரை அழிந்தபின்னர் வெற்றிவேற்செழியனென்ற கொற்கையாளன் மதுரை சென்று நன்மாறனென்ற பேருடன் ஆண்டுவந்தான். இவனுடைய பேரன் காலத்திற்றான் சங்கமழிவடைந்தது.

சேரர் ஆட்சி ஓங்கிய காலத்திலும் சோழமன்னரிருந்ததாகவே வெளியாகிறது. என்றாலும், அவர்களுடைய பூர்வநிலை குலைந்து ஆட்சியின் நிலப்பரப்புக் குறைந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். தொண்டைநாட்டு ஆதிக்யம் அவர்கள் வசமிருந்ததாகப் புலப்



படவில்லை. கோச்செங்கண்ணான் என்ற ஓர் சோழ அரசன் சேரர்களைச் சீர்காழிக்குச் சமீபத்தில் தோற்கடித்து அவர்களுடைய வலியைக் குறைத்தானென்று தெரிகிறது. இவன் சிவபெருமானுக்கு 70 ஆலயங்கள் கட்டுவித்தானென்று வைணவப்ரபந்தத்தில் கூறியுள்ளது. வரவரப் பல்லவர்களாலும் சாளுக்கியர்களாலும் சோழராட்சி குறைவுபட்டு ஒரு கிளை வடநாட்டிற்கும் மற்றொரு கிளை பாண்டியநாட்டிற்கும் ஓடிவிட்டனவென்றும் சோழமண்டலம் பல்லவராட்சிக்குள்ளடங்கியதென்றும் ஊகிக்கலாம். திருஞானசம்பந்தர் முயற்சியால் சைவமதத்தைத் தழுவிய கூன்பாண்டியனின் மனைவி ஒரு சோழவரசன் மகளென்பது சொல்லப்பட்டிருக்கிறது.

---

## அதிகாரம் XII.

## பல்லவர்.

பல்லவர் கூட்டத்தார் மலைநாட்டுக் குறும்பர் குலத்
திலுதித்தவரெனக் கொள்கையிருப்பினும்,
அவர்கள் வடநாட்டிலிருந்து வந்தவர்களாகவே நிர்மா
ணிக்கப்படுகின்றனர். ஆரியர் சம்பந்தம் விசேஷ
மாயிருந்ததென்பதற்கு அவர்களுடைய தாமிர சாஸ
னங்களே பிரமாணம். அவர் தென்னாட்டு மக்களு
டன் கலந்தபின்னர் அவர்களுடைய ஒழுக்கம், பாஷை,
மதம் முதலியவை தமிழ் மக்கட்குரியவற்றை ஒத்த
னவாகிவிட்டன போலும். ஆதியில் பல்லவர் பௌத்தர்
களாயிருந்தனரென்பதும் பிறகு வைணவர்களாகவும்
சைவர்களாகவும் மாறினரென்பதும் திண்ணம். பௌ
த்த ஜயினமதங்களைப் போக்கிய புராணமதம் கிளம்பி
யது தமிழகம் பல்லவராட்சிக்குள்ளடங்கிய காலமா
கும். சைவமதத்தைப் பரவச்செய்த அடியார்களும்
வைஷ்ணவ மதத்தைச் சிறப்பித்த ஆழ்வார்களும்
தோன்றிய காலமும் இதுவே. பாறைக் கல்லால் தேவா
லயங்கள் கட்டப்பட்டது இவர்கள் காலத்திற்றான்.
இவர்கள் தங்களுடைய பேர் அழியாவண்ணம் பல
சிவாலயங்களையும் விஷ்ணுவாலயங்களையும் எடுப்பித்
தார்கள்.



தொண்டைமண்டலத்தின் தலைநகராகிய காஞ்சி
யை ஜயித்துப் பல்லவராட்சியைத் தமிழகத்தில் நாட்
டிய பல்லவர்கோன் சிம்மவிஷ்ணு. இவன் மிக்க போர்
வலிமையுள்ளவன். இவனுடைய மகன் முதல் மகேந்
திரவர்மன்தான் அப்பர் சுவாமிகளைப் பலவாறு துன்
புறுத்தியவன். இவனே அவருடைய அற்புதச் செய
லால் ஜயினமதத்தை ஒழித்துச் சைவத்தைக் கைக்
கொண்டான். வடநாட்டுச் சாளுக்கியமன்னன் இர
ண்டாம் புலிகேசனைவென்று வாதாவி நகரையழித்த
வன் இவனுடைய மகன் முதல் நரசிம்மவர்மன். இவ
னுக்கு மாமல்லனென்ற மற்றொரு பெயருமுண்டு. மகா
பலிபுரமென்கிற மாமல்லபுரத்தை நிர்மாணம் செய்து
தன் வெற்றிக்கு அறிகுறியாக அதில் அழகிய கோபு
ரங்களைச் செதுக்கியவனிவனே. பரஞ்சோதியென்ற
சிறுத்தொண்டர் இவனுடைய சேனைத்தலைவர். இவனு
டைய பேரன் பரமேசுவரவர்மனென்பானொருவன்
பெருவளநல்லூர்ப் போரில் சாளுக்கிய மன்னன் இர
ண்டாவது விக்கிரமாதித்தனை வென்று காஞ்சிக்கருகா
மையில் பரமேச்சுரவிண்ணகரமென்ற திருமாலின்
கோயிலைக் கட்டினான். இக்கோயிலைத் திருமங்கை
ஆழ்வார் பத்துப் பாசுரங்களில் பாடியுள்ளார்.
இவன் குலத்திற்பிறந்த நந்திவர்ம பல்லவமல்லன்
காலத்திற்றான் திருமங்கையாழ்வார் இருந்தார். 52
ஆண்டுகள் அரசுபுரிந்த இவனே பல்லவ அரசர்
களிற் சிறந்தவன். கும்பகோணத்துக்கருகில் நாதன்

கோயிலென்ற விஷ்ணுவாலயத்தைக் கட்டினவன் இவனே. பல்லவ அரசர்களுக்கு ராஷ்டிரகூடமன்னர்கள் நெடுங்காலமாக விரோதிகள். அவர்கள் தலையெடுக்கவே பல்லவராட்சி குறைவடைந்தது. சமயம் பார்த்துப் பாண்டியவரசன் வரகுணனென்பான் சோழருக்கிலைக்கொண்டு அபராஜிதனென்ற பல்லவர்கோனையும் கொங்குநாட்டு மன்னன் பிருதிவிபதியையும் திருப்புறம்பயப் பெரும்போரில் தோற்க அடித்ததாகத் தெரிகிறது. பிருதிவீபதி உயிர்துறந்தான். பல்லவர் வடநாடு சென்றார்கள். சோழராகிய பயிருக்கு இப்போர் களையெடுத்தது போலாயிற்று. சோழமன்னன் விஜயாலயன் தஞ்சையைக் கைவசமாக்கி மீண்டும் சோழராட்சியை நிலைநிறுத்தினான்.

---



## அதிகாரம் XIII.

# சோழர்கள்.

---

பல்லவராட்சி யொழிந்து பாண்டியர்களும் உள்நாட்டுக் கலகத்தினால் சீர்குலைந்து கிடந்த நாளில் சோழர்களுக்கு முன்னேற்றமடையத்தக்க சமயம் வாய்த்தது. கி. பி. 894-ல் கொங்குநாட்டையும் தொண்டைமண்டலத்தையும் கைப்பற்றிக்கொண்ட ஆதித்தன் தஞ்சையைத் தலைநகராக்கிச் சோழராட்சியைப் பரவச்செய்தனன். அவனுடைய மகன் முதல் பராந்தகன். இவன் வாணகோவரையர்களின் மகதநாட்டையும், கங்கவரசரின் நாட்டையும், ஈழமென்ற இலங்கைத்தீவையும் ஜயித்து அரசுபுரியுங்காலையில் ராஷ்டிரகூடமன்னன் முதல் கிருஷ்ணன் சோழமண்டலத்தில் படையெடுத்துவரப் பராந்தகனின் மகன் ராஜாதித்தன் அவனுடன் செய்த போரில் உயிரிழந்தான்.

பராந்தகன் வம்சத்திலுதித்த ராஜராஜசோழனே சோழமன்னரில் சிறந்தவன். சாளுக்கிய மன்னரின் இருகிளைகளையும் வென்று, காஞ்சியில் கோட்டைகட்டி வேங்கிநாடன் விமலாதித்தனைத் தனக்கு மருமகனாக்கச் செய்தவனிவனே. இவ்வேந்தன் சேரபாண்டிய நாடு

களை ஜயித்து அவற்றிற்கு ராஜராஜன் தென்னாடு என்ற ஒரு பெயரையிட்டு அதைத்தன் சேனைத்தலைவன்வசம் ஒப்புவித்தான். ஈழமும் அவனுடைய குடைக்கீழ் அமர்ந்தது. இவ்விதம் சோழராட்சி தென்னாடு முழுவதும் பரவிற்று. இவன்தான் தன்னுடைய வெற்றிக்கு அறிகுறியாய்த் தஞ்சையிலிருக்கும் அழகிய சிவாலயத்தைக் கட்டியவன். இவனுடைய போர் வலிமையைக்காட்டிலும் அரசுமுறை சிறந்ததாகும். சோழமண்டலத்தைக் காட்டிலும் செழித்தநாடு எங்குமில்லையெனக்கூறுமாறு அரசுபுரிந்த ராஜராஜனின் புகழ் இன்றும் நிலைபெற்றதேயாகும். 1022-ல் பட்டத்திற்குவந்த ராஜராஜன் மகன் ராஜேந்திரதேவன் தந்தையினும் மிக்கபோர்வலியுள்ளவன். இவன் கங்கைக்கரைவரைக்குமுள்ள நாடுகளை ஜயித்துத் தன் வெற்றிக்கு அறிகுறியாகச் சோழநாட்டில் கங்கைகொண்ட சோழபுரமென்ற வூரைப் புதிதாகவமைத்து அவ்விடத்தில் தஞ்சைக்கோயிலைப்போல் அழகிய சிவாலயமொன்றை நிர்மாணம்செய்தான். இவன் கப்பற்படையினும் உயர்ந்தவன். கடாரம், சீய முதலிய நாடுகளையும் வென்று மேல்சமுத்திரத்திலுள்ள லக்ஷத்தீவுகளையும் கைவசமாக்கினான்.

ராஜேந்திர சோழனுக்குப்பிறகு ஆட்சிபுரிந்த சோழமன்னரில் முதல் ராஜாதிராஜன், இராஜேந்திர தேவன் 1, வீரராஜேந்திரன், முதல் குலோத்துங்கன், விக்ரமன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் என்போர் சிறந்தவர்கள். முதல் ராஜாதிராஜனுக்கு ஜயங்கொண்டான் என்றொருபெயரிருந்தமையால் ஜயங்கொண்டசோழபுரம் இவனமைத்த நகராகும். மன்னார்குடி ஜயங்கொண்ட நாதாலயமும் ராஜாதிராஜேச்சுராலயமும் இவன்கட்டிய சிவாலயங்களே. இவனுடைய தம்பி ராஜேந்திரதேவனும் இவனும் சாளுக்கியரோடுசெய்த கொப்பத்துப்போரில் வெற்றிபெற்றார்கள். தமையன் மரிக்கவே, தம்பி 8 வருஷகாலம் தனியே அரசுசெலுத்தி மேலைச்சாளுக்கியரோடு போர்புரிந்து அவர்களுடைய தலைநகராகிய கல்லியாணபுரத்தில் ஒரு ஜயஸ்தம்பம் நாட்டினான். கோவிலடிக்குச் சமீபத்தில் காவேரியில் அணை கட்டியவன் இவனுடைய தம்பி வீரராஜேந்திரனே. வீரசோழனாற்றையும் வெட்டியவனிவன்தான். இவனுக்குப்பிறகு வேங்கிநாடனும் ராஜேந்திர சோழனின் பேரனுமான முதல் குலோத்துங்கன் சோழவரசனானான். சுங்கம் தவிர்த்த சோழனிவனே. பெரியபுராணம் பாடிய சேக்கிழார் இவனுடைய அமைச்சர். ஸ்ரீரங்கத்தில் திரிவிக்ரமன் திருவீதி கட்டிய விக்ரமசோழன் குலோத்துங்கனுடைய மகன். விக்ரமனாறு வெட்டியவனும் இவனே. ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய தமிழ்ப் புலவர்களிருந்தது இவன் காலத்திற்றான். இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தில் பாண்டிய அரசர்கள் பட்டம் பெறுவதைப்பற்றி நடந்தபோரில் இவ்வரசன் குலசேகரனுக்கு உதவிபுரிந்து, வீரபாண்டியனுக்கு உதவிசெய்த ஈழத் தலைவரிருவரையும்

தன் கத்தியால் குத்திக்கொன்றான். மூன்றாம் குலோத்துங்கன் சைனமதப் பற்றுள்ளவன். அவன் கட்டிய சிவாலயங்களில் திரிபுவனம் கோயிலும் தாராசுரமென்னும் ராஜராஜபுரம் கோயிலுமே சிறந்தன. மூன்றாம் ராஜேந்திரசோழனே சோழரில் கடைசிமன்னனாகச் சொல்லலாம். பாண்டியவரசன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் சோழமண்டலத்தின் மீது படையெடுத்து வடநாடனைத்தையும் கைவசமாக்கிக் கங்கை கொண்ட சோழபுரத்தை அடியோடு அழித்தனர்.

1310-ல் வடநாட்டிலிருந்துவந்த மாலிக்காபூரென்ற முகமதியவீரன் சோழபாண்டியரின் ஆட்சியைத் தொலைத்து மதுரையில் ஒரு முகமதிய ஆட்சியை நாட்டிச்சென்றான். முகமதியரின் கொடுமை பொறுக்க முடியாத தமிழ் மக்கள் விஜயநகரம் சென்று அவ்வரசனிடம் முறையிட, ஒரு விஜயநகரச்சேனை தென்னாட்டின்மீது படையெடுத்துவந்து முகமதியராட்சியை நாசமாக்கிச்சென்றது. அதுமுதல் தென்னாடு விஜயநகர ஆட்சியின் ஒரு பெரும் பகுதியாய் மாறிற்று.



## அதிகாரம் XIV.

## பாண்டியர்.

கோவலனைக் கொடுங் கொலைக்குள்ளாக்கியவன் [illegible] நெடுஞ்செழியனென்றும் இவன் சங்ககால பாண்டியவரசனென்றும் முன்னமே கூறியுள்ளோம். இவன் மரித்தவுடன் கொற்கையிலாண்டுவந்த வெற்றிவேற்செழியன் மதுரைக்கரசனாகி நன்மாறனென்ற பெயருடன் ஆட்சிபுரிந்தான். பாண்டிய அரசருள் இரண்டாவது நெடுஞ்செழியன் சிறந்தவன். இவன் சேர சோழரையும் ஐந்து குறுநிலமன்னர்களையும் தலையாலங்கானப்போரில் வென்று சக்கரவர்த்தியாய்த் தென்னாடுமுழுவதையும் ஆண்டுவந்தான். மாங்குடி மருதனாரென்ற புலவர் மதுரைக்காஞ்சியென்ற நூலில் இவனைப்புகழ்ந்து பாடியுள்ளார். இவனுடைய மகன் உக்கிரப்பெருவழுதி காலத்திற்றான் சங்கமழிந்தது.

களப்பிரரென்ற கன்னட தேசவாசிகள் மதுரையைக்கைவசமாக்கி ஆட்சிபுரியும் காலையில் கடுங்கோன் பாண்டியனென்ற ஒரு வீரன் கிளம்பி அவர்களைத் தொலைத்துப் பாண்டியராட்சியை மீண்டும் மதுரையில் நாட்டினான். இவன் மகன் மாறவர்மன். மாறவர்மனுடைய பேரன் அரிகேசரி நெடுமாறன். இவன்தான்

கூன்பாண்டியனென்பர். திருஞானசம்பந்தர் சமணரை வாதத்தில்வென்று 8000 சமணரைக் கழுவிலேற்றச் செய்தது இவன் காலத்திற்றான். சீனதேசத்துப் பௌத்தப் பிரயாணி ஹியோன்சாங் என்பவன் தென்னாட்டிற்கு வந்தகாலமும் இதுவே. இந்தக் கூன்பாண்டின் மகன் கோச்சடையன் ரணதீரனென்பான் கொங்குநாடு சேரநாடு தஞ்சை நாடுகளைக் கைவசமாக்கி மங்கலபுரப்போரில் மேலைச்சாளுக்கியரைத் தோற்க அடித்தான். இவன் காலத்தில் மதுரையில் விஷ்ணுசித்தரென்ற பெரியாழ்வார் கிழியறுத்து வைணவத்தை நாட்டி அரசனையும் பரமவைணவனாகச் செய்தார். இவனுடைய மகன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் ஒரு சிவபக்தன். நெடுவாயிலில் பல்லவமல்லனுடன் போரிட்டவன் இவனே. இவனுடைய சந்ததியிற்பிறந்த நெடுஞ்சடையன், பராந்தகன், ராஜசிம்மன், முதல் வரகுணன், ஸ்ரீமாறன், ஸ்ரீவல்லபன் முதலிய பாண்டிய அரசர்கள் பலகாலும் பல்லவரோடு போர்புரிந்தனர். ஸ்ரீமாறன் மகனாகிய இரண்டாம் வரகுணன் சேரசோழர் உதவியைக்கொண்டு பல்லவமன்னன் அபராஜிதனுடன் திருப்புறம்பயத்தில் போர் புரிந்தனன். இவனுடைய தம்பி பராந்தகவீரநாராயணனின் மகன் ராஜசிம்மன் சோழஅரசன் பராந்தகனுடன் போர்புரிந்து, தோற்று அவனுக்கு அடங்கிய சிற்றரசனானான். இவனுடைய மகன் வீரபாண்டியன் சோழவரசன் இரண்டாவது பராந்தகனைக் கொன்றதனால் ஆதித்தகரிகாலனென்ற சோழ விளங்கோ இவனைப் போரிற் பிடித்துக்கொன்றான். ஆதித்தகரிகாலன் தம்பி சோழமன்னன் முதல் ராஜராஜன் பாண்டிய நாட்டைக் கைவசமாக்கினானென்று முன்னரே கூறியுள்ளோம்.



ராஜேந்திரசோழன் மதுரையில் சோழபாண்டிய வம்சத்தை நிலைநாட்டிப் பாண்டியரின் ஐந்துகிளைத் தலைவர்களையும் சிற்றரசர்களாகச் செய்தான். சோழபாண்டியராட்சி அறுபது ஆண்டுகளே நடைபெற்றது. முதல் ராஜாதிராஜன் பொன்முடி தரித்த மானாபரணனுடைய அழகிய சிரசைப்போரிற் சிதைத்து அத்திவாரணமென்ற பட்டத்து யானையின் காலால் வீரகேரளனை மிதிக்கச்செய்து புகழ்பெற்ற சுந்தரபாண்டியனை முல்லையூர் புகத் துரத்தியடித்தானென்று அவனது மெய்க்கீர்த்தியில் கூறியுள்ளது. சோழர் வலிமைகுறையவே 100 வருஷகாலம் செயலற்றுக்கிடந்த பாண்டியர்களின் கை ஓங்கிற்று. மூன்றாங்குலோத்துங்கன்காலத்தில் மதுரையில் பராக்கிரம பாண்டியனுக்கும் குலசேகரபாண்டியனுக்கும் போர்தொடங்கிற்று. நாடிழந்த பராக்ரமன் இலங்கைக்கோடி அங்குள்ள லங்கைவேந்தன் பராக்ரமபாகுவின் உதவியை வேண்டினான். அவ்வரசன் லங்காபுரித் தண்டநாதனென்ற ஒரு வீரன்வசம் ஒரு திரண்டசேனையை யனுப்பினான். இப்போர் மகாவம்சமென்ற இலங்கைச் சரித்திரத்தில் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. சிங்களச்சேனை மதுரை நாட்டை ஜயித்துப் பராக்ரம

னுடைய மகன் வீரபாண்டியனுக்கும் பட்டம் கட்டிற்று. சோழவரசன் உதவியைக்கொண்டு குலசேகரன் மீண்டும் போர் செய்து மதுரையைக் கைவசமாக்கிக்கொண்டான். சிங்களச்சேனை திரும்பிச் சென்ற பிறகும் வீரபாண்டியனுக்கும் குலசேகரனுக்கும் நடந்தபோர் முடிவுபெறவில்லை. குலசேகரன் மரிக்கவே, அவனுடைய மகன் விக்கிரமபாண்டியனுக்கு மூன்றாங் குலோத்துங்கன் உதவிபுரிந்து சிங்களவீரர்களின் மூக்குகளையரிந்து அவர்களைத் துரத்திவிட்டு, மதுரையில் விக்ரமபாண்டியனுக்கு முடி சூட்டினான்.

சோழர்களின் தாழ்வு அதிகரிக்கவே, பாண்டியர்கள் உயர்வடைந்தார்கள். 1216-ல் பட்டத்திற்கு வந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் தஞ்சையையும் உறையூரையும் சுட்டெரித்துச் சோழராச்சியத்தை வென்று மீண்டும் அவர்களுக்குத் தானமாகக் கொடுத்தான். இரண்டாம் மாறவர்மன் 1251 வரைக்கும் ஆட்சி புரிந்தான். பிறகு, பட்டத்திற்குவந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டிய அரசருள் சிறந்தவன். இவனுடைய புகழைப்பற்றி ஸ்ரீரங்கம் கோவிலொழுகு என்றநூலில் கூறப்பட்டுள்ளது. இவன் சேர, சோழ, வல்லாளநாடுகளை ஜயித்துத் தானடித்துவந்தபொருளை வாராளமாகச் செலவிட்டு ஸ்ரீரங்கம் கோவிலில் துலாபுருஷமண்டபங்களைக் கட்டி, 18 லக்ஷம் பொற்காசுகளை யழித்துக் கோவில் விமான முழுவதிலும் பொன் ஓடுபோட்டு, "கோவில் பொன்வேய்ந்த பெருமான்" என்ற புகழ்ப்பேரையும் தரித்தான். பொன்னிக்கரையில் ஹோசலமன்னன் வீரசோமேசுவரனை வென்று அவனுடைய சேனை முழுவதையும் அழித்தானென்று கூறப்பட்டிருக்கிறது. சேந்தமங்கலம் கோட்டையைக் கைவசமாக்கிப் பல்லவகோப்பெருஞ்சிங்கனை நடுக்கமுறச் செய்தான். தில்லைக்குச் சென்று நடராஜமூர்த்தியைத் தரிசனஞ்செய்து மீண்டும் ஸ்ரீரங்கம் வந்து துலாபாரதானமென்ற வைதிகச் சடங்கைச் செய்து பல தானதர்மங்களைச் செய்தான். ஈழத்தை ஜயித்துக் கலியுகராமனென்ற வீரபட்டத்தையடைந்தான். 1268-ல் பட்டத்திற்குவந்த மாறவர்மன்குலசேகர பாண்டியனை அவனுடைய மகன் சுந்தரபாண்டியன் கொலைசெய்துவிட்டதாக முகமதிய சரித்திரத்தில் கூறியுள்ளது. 1270–1310 வரைக்கும் பாண்டிய அரசர் பலரிருந்ததாகத் தெரிகிறது. 1275-ல் பட்டத்திற்கு வந்த இரண்டாவது ஜடாவர்மன் சுந்தர பாண்டியனை கடைசிப் பாண்டியவரசனென்று நினைக்க இடமுண்டு. மாறவர்மன் குலசேகரன் 40 ஆண்டு ஆட்சிபுரிந்ததாகக் கூறியுள்ளபடியால் இவன் மரித்தவுடன் வடநாட்டு முகமதியவீரன் மாலிக்காபூர் மதுரையைப் பிடித்து அங்கே ஒரு முகமது ராஜ்யத்தை நாட்டினானென்று கூறவேண்டியிருக்கிறது. இவ்வாட்சியின்முடிவில் விஜயநகரமன்னர் தென்னாடு முழுவதையும் கைவசமாக்கினாரென்று முன்னமே கூறியுள்ளோம்.

## அதிகாரம் XV.

# தமிழரின் தற்கால நிலைமை.

சேர, சோழ, பாண்டிய தமிழரசர்களின் குலமே நசித்துத் தென்னாடுமுழுவதும் விஜயநகரமன்னராட்சிக்குள்ளடங்கியதென்பது முன்னரே கூறப்பட்டது. விஜயநகரத்தரசர்கள் நாயக்கப்பிரதிநிதிகளை, செஞ்சி, தஞ்சை, மதுரை முதலியவிடங்களில் நியமித்து ஆட்சிபுரிந்தனர். 1565-ல் நடந்த தலைக்கோட்டைப்போரில் முகமதியரால் விஜயநகர் ஆட்சி அழிக்கப்பட்டது. வரவர நாயக்கர்கள் அரசும் தொலையவே நாடெங்கும் முகமதியராட்சிக்குள்ளாயிற்று. வியாபாரநிமித்தம் இந்தியாதேசத்திற்குவந்த ஐரோப்பியக்கூட்டத்தார் சுதேசமன்னர்களின் செயலற்றதன்மையையும் போர்வலிமையின் குறையையும் நன்குணர்ந்து தங்களுடைய அரசை இத்தேசத்தில் நாட்டமுயன்று கடைசியில் தங்களுடைய மனோரதத்தைப்பூர்த்தி செய்துவிட்டனர். ஆற்காட்டு முகமதிய நவாபின் ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழகத்தை ஆங்கிலேயர் நாளடைவில் வரவரக் கைவசமாக்கிக்கொண்டனர். தற்காலத்தில் சென்னைராஜதானியின் ஒரு பகுதியாகிய தமிழகம் ஆங்கிலேயர் ஆட்சியினுள்ளிருக்கிறது.



பலநாடுகளாய்ப்பிரிந்து பல அரசாட்சிக்குள்ளடங்கி 2000 வருஷகாலமாய்ச் சீர்குலைந்து கிடந்த நம் தமிழகம் வேறுபாடின்றி ஒரே நாடாகி ஆங்கிலர் சிங்கக்கொடியின் ஆதரவில் சுகமே வாழ்ந்து வருகிறது. தமது திறமையைப் போரில் காட்டிய தமிழரின் வலிமை அவரைவிட்டு நீங்கவில்லையென்பது ஆங்கில அரசர்படைகளில் நந்தமிழர் செய்துவரும் வீரச்செயலைக்கொண்டு ஊகிக்கலாம். ஆதிகாலத்தில் கப்பலேறிப் பலநாடுகளுக்குச்சென்று வியாபாரம் செய்துவந்த மக்களின் சந்ததியார் தற்காலத்திலும் கடல்கடந்து பிறநாடுசென்று வர்த்தகம் செய்துவருகிறார்கள். ஆப்பிரிக்கா, ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா முதலிய கண்டங்களுக்குச் சென்று வியாபாரத்திலோ வேலைசெய்வதிலோ பொருள்தேடும் தமிழரநேகர். செய்நன்றியறிதல், விடாமுயற்சி, பொறுமை, நல்லொழுக்கம் முதலிய நற்குணங்களுள்ளவராயிருத்தல்பற்றி அக்குணங்கள் தமிழர்பால் காணப்படுமளவு மற்ற இந்தியரிடமில்லையென்று ஐரோப்பியரும் சொல்லியும் எழுதியுமிருக்கிறார்கள். சிப்பாய்க் கலகத்தில் தமிழர் சேனைசெய்த உதவியை மறந்த ஆங்கில துரைத்தன அதிகாரிகள் எவரும் இல்லை. கைத்தொழிற்சாலைகளில் தமிழர் செய்துவரும் வேலையும் பாராட்டத்தக்கதே. அதிகாரிகளும் குடிகளும் ஒத்து ராஜகாரியங்

12/6/89



களை நடத்துவதில் தமிழரே சிறந்தவர்களெனப் பல முறையும் ஆங்கில அதிகாரிகள் எழுதுகிறார்கள். "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்ற ஆன்றோர் வாக்குப் பொய்போகாவண்ணம் செய்துவரும் தமிழ் மக்கட்கு எல்லாம்வல்ல இறைவன் மேன்மேலும் புகழையும் செல்வத்தையும் அளித்தருளுவாராக!

முற்றிற்று.

59435

V211
N27.